பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 11 வெள்ளிக்கிழமை (23-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:150

**அரசுத் தரப்புக்கு நாடாளுமன்றில் முதல் 'அடி'!**

# எதிரணியின் லொக்கு பண்டார சபாநாயகர் தேர்வில் வெற்றி!



இரண்டாம் கட்ட வாக்களிப்பை அடுத்து எழுந்த நெருக்கடிக்கு தீர்வு காணும் முயற்சியில் கட்சித் தலைவர்கள் ஈடுபட்ட சமயம்.

## இழுபறி, குழப்பங்களுக்கு மத்தியில் வாக்கெடுப்பு ஒரேயொரு வாக்கினால் தோற்றார் டியூ குணசேகர



கொழும்பு,ஏப்ரல்23

**இலங்கையின் புதிய சபாநாயகராக எதிர்க்கட்சிகளின் தரப்பில் நிறுத்தப்பட்ட மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டார ஒரு மேலதிக வாக்கினால் தெரிவானார்.**

**பெருங்குழப்பங்கள், இழுபறிகளுக்கு மத்தியில் நடந்த இத்தேர்தலின் மூன்றாவது வாக்கெடுப்பிலேயே சபாநாயகர் தெரிவு சாத்தியமாயிற்று.**

**அரச தரப்பினால் சபாநாயகர் பதவிக்கு நிறுத்தப்பட்டிருந்த டியூ குணசேகர தோற்றுப்போனார். இது புதிய ஆட்சியை அமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிறுபான்மை அரசுக்கு நாடாளுமன்றத்தில் விழுந்த முதல் 'அடி'யாகக் கருதப்படுகிறது.**

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றுக்கு சபாநாயகர் ஒருவரைத் தெரிவுசெய்வதில் நேற்றைய அமர்வு பெரும் குழப்பத்தில் ஆழ்ந்தது. எதிர்பாராத பல திருப்பங்கள் இடம்பெற்றன.

சபாநாயகர் தெரிவுக்காக முதலில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஆளும் கட்சி வேட்பாளரான டியூ குணசேகரவும், எதிர்க்கட்சி வேட்பாளரான லொக்கு பண்டாரவும் சரிசமமான வாக்குகளைப் பெற்றதால் இரண்டாவது வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அந்த வாக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது வாக்கெடுப்பைக் குழப்பியதால் வாங்கிக் கட்டிக் கொண்டது அரசுத்தரப்பு!

கொழும்பு,ஏப்.23

புதிய சபாநாயகரைத் தெரிவு செய்வது தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பை அரசுத்தரப்பு எம்.பிக்கள் குழப்பியதால்தான் அத்தேர்வில் தங்களின் தரப்புப் பிரதிநிதி ஒரு வாக்கினால் தோற்கவேண்டிய அவலத்தை அவர்கள் சந்திக்க வேண்டியதாயிற்று என்று நாடாளுமன்றச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முதல் வாக்கெடுப்பில் ஹெல உறுமயவின் ஏழு எம்.பிக்களும், தமிழ்க் கூட்டமைப்பின் கிங்ஸ்லி இராசநாயகம் எம்.பியும் போக எஞ்சிய 217 எம்.பிக்களும் வாக்களித்தனர்.

அரசுத்தரப்பின் 106 எம்பிக்களோடு (டக்ளஸ் தேவானந்தா உட்பட) ஹெல உறுமயவிலிருந்து அரசுத்தரப்புக்கு மாறிய இரு எம்.பிக்களுமாக மொத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிக்கு எம்.பிக்கள் புத்தர் சிலை சகிதம்! தமிழர்கள் பாரம்பரிய உடையுடன்!!

**நாடாளுமன்றப் பிரவேசம்**

கொழும்பு,ஏப்.23

ஜாதிக ஹெல உறுமயவின் ஒன்பது பிக்கு எம்.பிக்களில் ஏழு பேர் நேற்று நாடாளுமன்றத்துக்கு முதல் தடவையாகச் செல்ல முன்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

பின்னர் பிக்குகளுக்குரிய உடையுடன் சுமார் இரண்டு அடி உயரமுடைய புத்தர் சிலையையும் தம்முடன எடுத்துக்கொண்டு நாடாளுமன்றுக்குச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பிரகடனம் தமிழில் வழங்கப்படவில்லை

கொழும்பு,ஏப்.23

நேற்று பதின்மூன்றாவது நாடாளுமன்றம் கூடுவது தொடர்பான ஜனாதிபதியின் பிரகடனம் நாடாளுமன்றத்தில் சிங்களத்தில் மட்டுமே வாசிக்கப்பட்டது. அப்பிரகடனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிடப்படவில்லை.

நேற்றுக்காலை 10 மணிக்கு முதலாவது அமர்வுக்காகத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட எம்பிக்கள் சபைக்குள் சமுகம் தந்ததும் நாடாளுமன்றத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கோலுக்கு மரியாதை செலுத்தாத பிக்கு எம்.பிமார்கள்

கொழும்பு,ஏப்.23

நேற்று 13 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வின்போது செங்கோல் சபைக்கு எடுத்துவரப்பட்ட சமயம் ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிக்கு எம்.பிமார் எழுந்து நிற்கவில்லை. ஏனைய எம்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகரைத் தெரிவு செய்யாமல் கலைய முடியாத இக்கட்டு ஏற்பட்டது

ஜனாதிபதியின் பிரகடனத்துக்கு அமைவாக நேற்று முதல்தடவையாகக் கூடிய நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவுவிடயம் பெரும் இழுபறிக்கும் களேபரத்துக்கும் உள்ளானது.

எனினும், நேற்றுக்காலையில் கூடிய நாடாளுமன்றம் இறுதியாக ஒரு சபாநாயகரைத் தெரிவு செய்யாமல் கலைய முடியாது என நாடாளுமன்ற வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

ஜனாதிபதியின் பிரகடனத்துடன் கூடுகின்ற சபையை பிறிதொரு தினத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

**புலிகள் அமைப்பில் இணைந்த**

## வயது குறைந்த எட்டுச் சிறார்கள் இடைத்தங்கல் முகாமில் கையளிப்பு

கிளிநொச்சி,ஏப்.23

விடுதலைப் புலிகளில் இணைந்த வயது குறைந்த எட்டுச்சிறார்கள் கிளிநொச்சி இடைத்தங்கல் முகாமில் நேற்று கையளிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர் கந்தம்மான் தலைமையிலான குழுவினர் தமது அமைப்பில் இணைந்தவர்கள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.23

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜெவ்ரி லம்சட் விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று நிபந்தனைகளோடு மூன்றாவது வாக்கெடுப்பு

கொழும்பு,ஏப்.23

சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான மூன்றாவது வாக்கெடுப்பு நேற்றுமாலை 5 மணியளவில் ஆரம்பமானது.

அப்போது அளிக்கப்படும் வாக்குகள் செல்லுபடியாவதற்கு மூன்று நிபந்தனைகளை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவித்தார்.

★ வாக்களிக்கும் எம்.பி.தாம் யாருக்கு வாக்களிக்கின்றார் என்பதை

(14 ஆம் பக்கம் பார்க்க)



# இலவச ஆயுள் காப்புறுதிக் காப்பு!

தேசிய சேமிப்பு வங்கியின் ஏதாவது ஒரு சேமிப்புக் கணக்கில் 180 நாட்களுக்கு கூடுதலாக குறைந்தபட்சம் 20,000 ரூபாவை அல்லது அதற்குக் கூடுதலாக வைத்திருத்தல்.

- இயற்கை மரணம் - வைப்பில் உள்ள தொகைக்கு சமமான தொகை வழங்கப்படும். என்றாலும் ஆகக் கூடிய தொகையாக ரூபா.50,000 மாத்திரமே வழங்கப்படும்.
- விபத்து மரணம் - வைப்பில் உள்ள தொகைக்கு சமமான தொகை வழங்கப்படும். என்றாலும் ஆகக் கூடிய தொகையாக ரூபா.500,000 மாத்திரமே வழங்கப்படும். (இச்சலுகைக்கு தகுதியான வயதெல்லை 18-70 வருடங்கள்)

NSB தேசிய சேமிப்பு வங்கி

# அகதிகளுக்கான ஐ.நா.தூதரகக்குழு நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

கிளிநொச்சி,ஏப்.23

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகக் கண்காணிப்பாளர் நாயகம் தலைமையிலான தூதுக்குழுவினர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வளங்கள் மிகக் குறைவானவையாகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவும் இருப்பதனால் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத்திட்டங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் ஏழைகளில் ஏழையான மக்களையே சென்றடைய வேண்டும் என்று கண்காணிப்பாளர் நாயகம் டெனிஸ் மக்நமாரா தமிழ்ச்செல்வனிடம் வலியுறுத்தினார்.

தனது விஜயத்தின் நோக்கம் பற்றி அவர் தமிழ்ச்செல்வனுக்கு விளக்கியதுடன் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை தொடர்பாகக் கேட்டறிந்தும் கொண்டார்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் பற்றியும் அவர் விசாரித்தார். தமது வீடுகளுக்கு திரும்புபவர்களுக்கும் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கும் தமது அமைப்பு உறுதியான உதவிகளை வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ்மக்கள் தமது உரிமைக்காகப் போராடி வருகின்றனர் என்று டெனிஸ் மகநமாராவுக்கு எடுத்து விளக்கினார் தமிழ்ச்செல்வன். புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடனடியாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த தமிழ்க்கூட்டமைப்பின் தேர்தல் கொள்கைக்கு தமிழ்மக்கள் தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளனர். எனவே, இந்த விடயத்தில் அரசு உடனடியாகச் செயற்பட வேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் அவருக்குச் சுட்டிக்காட்டினார். உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர முடியவில்லை என்பதைக் கூறிய தமிழ்ச்செல்வன், மிதிவெடிகள், மீள்குடியேற்றம் எதிர்நோக்கும் மற்றொரு சவால் என்றும் குறிப்பிட்டார்.(எ-க)





அகதிகளுக்கான ஐ.நா. தூதரகக் குழுவுக்கும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படங்கள்...

## அச்செழுவில் மிதிவெடி அகற்றிய பகுதி பிரதேச செயலரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

அச்செழுப் பகுதியில் தாம் மிதிவெடி அகற்றிய இரண்டாயிரத்து 399 சதுரமீற்றர் பரப்பளவுடைய நிலத்தை இராணுவத்தினர் மக்களின் பயன்பாட்டுக்கென கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் கே.இராசதுரையிடம் நேற்றுக் கையளித்தனர்.

இந்நிலத்தை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று அச்செழு கிராம அலுவலர் பணிமனையில் நடைபெற்றது.

கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் கே.இராசதுரை மாவட்ட செயலகத்தில் இயங்கும் மிதிவெடி அகற்றும் செயற்பாட்டுப் பிரிவு பொறுப்பதிகாரி ம.செந்தில்குமார் மற்றும் அச்செழு இராணுவமுகாம் பொறுப்பதிகாரி உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ-5)

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

பொதுத்தேர்தல் 2004 உம், அதன சுற்பிதங்களும் என்னும் தலைப்பிலான அரசியல் கருத்தரங்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரி வெளிவாரிப் பட்டதாரிகள் பிரிவு மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சோ.சிவபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் சா.தியாகலிங்கம் இதில கருத்துரையாற்றவுள்ளார். (எ-12)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.23

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை நட்புதவியாளர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 25ஆம், 26 ஆம் திகதிகளில் மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலய - பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் இதில் கருத்துரையாற்றுவார். (எ-12)

## சமய சந்நிதிகளில்

கோண்டாவில்,ஏப்.23

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

10ஆம் நாளன்று சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் அன்னதானம் வழங்கப்படும். (8-49)

☆ ☆ ☆

நவாலி,ஏப்.23

மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (8-100)

☆ ☆ ☆

வலி.தென்மேற்கு,ஏப்.23

பெரிய விளான் வடசேரி பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 5 ஆம் திகதி புதன கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (8-135)

☆ ☆ ☆

வலி.தென்மேற்கு,ஏப்.23

சண்டிலிப்பாய், சீரணி ஸ்ரீநாக பூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 4ஆம்திகதி தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். (8-135)

☆ ☆ ☆

வலி.தென்மேற்கு,ஏப்.23

மாதகல், நுணசை ஸ்ரீமுருக மூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 3ஆம் திகதி திங் கட்கிழமை தேர்த்திருவிழாவும், 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் பகல் 12 மணி முதல் 1 மணிவரை சிவநெறிச் செல்வர், இரா.செல்வவடிவேல் "முருகன் பெருமை" என்ற பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். (8-135)

## கையளிப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததை அடுத்து

# நீதிமன்று விடுவித்த தமிழகப்படகோட்டிகள் தொடர்ந்தும் யாழ்.சிறையில் தவங்கிடப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவிய சமயம் கைது செய்யப் பட்டு யாழ்.மேல் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி விடுவிக்கப்பட்ட 54 தமிழக மீனவப்படகோடிகள் இன்னமும் தமிழகத்துக்கு அனுப்பப்படவில்லை எனத் தெரியவந்தது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 67 தமிழக மீனவப்படகோட்டிகள் யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 54 பேருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் சட்ட மா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்குகளில் 15 பேருக்கு எதிரான வழக்குகள் கடந்த மாதம் 26 ஆம் திகதியும் -

39 பேருக்கு எதிரான வழக்குகள் கடந்த மாதம் 30 ஆம் திகதியும் - மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இந்த வழக்குகளில் அபராதம் விதிக்கப்பட்டதுடன், சிறையில் இருந்த காலத்தைக் கருத்திற்கொண்டு வழக்குகளில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை இந்தியக் கடற்படையினரிடம் கையளிக்க ஏற்பாடு செய்யும்படி யாழ். கடற்படை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், அவர்கள் இதுவரை தமது ஊர்களுக்குச் செல்லாமல் தொடர்ந்தும் யாழ்.சிறைச்சாலையில் உள்ளதாகத் தெரியவந்தது.

சிறைச்சாலையில் இருந்து இவர்கள் அழைத்துச் செல்லப்படும் பட்சத்தில் சிறைச்சாலையில் நிலவும் இட நெருக்கடி நீங்க வாய்ப்பு உண்டு என சிறைச்சாலை வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (எ-3)

## கசிப்பு வழக்கில் இருவருக்கு ரூ.50 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் சட்டவிரோதமாக மோட்டார்ச் சைக்கிளில் கசிப்புக்கொண்டு சென்றமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் இருவருக்கு யாழ்.நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

ஆசாத் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரத்தினகுமார் இரதன், அராலி வீதி ஓட்டுமடத்தைச் சேர்ந்த நிக்ஸன் நிஷான் ஆகிய இருவரையும் தலா 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான இ.த.விக்னராசா நேற்று உத்தரவிட்டார். (எ-5)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

தமிழ் மாணவர் ஒன்றியம் நடத்தும் வறியமாணவர் கல்வி மேம்பாட்டு நிதியத்துக்கான 'கொடிஏழல்' ஆரம்ப விழா நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்றும -

தவிர்க்கமுடியாத காரணத்தால் இடம்மாற்றப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-3-ரி)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஏப்.23

தமிழ் மொழிப்பாடத்தை முழுமையாக கற்றுத்தேறிய 40 சிங்களப் பொலீஸாருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 5 மணிக்கு கோப்பாயில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய்பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 20 பொலீஸாரும் - யாழ். பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 20 பொலீஸாருமாக மொத்தம் 40 பேர் சான்றிதழ் பெறவுள்ளனர்.

மேற்படி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கோப்பாய்ப்பொலீஸ் பொறுப்பதிகாரி ஸ்ரீ.செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அகதிகளுக்கான ஐநா.தூதரக அதிகாரிகள் சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்வர். (எ-185)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் கவிதை மற்றும் கட்டுரை பற்றிய கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு நிலைய இயக்குநர் அருட்திரு எஸ்ஜே இராஜநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ-12)

✪ ✪ ✪

ஊர்காவற்றுறை,ஏப்.23

ஊர்காவற்றுறை பிரதேசசபையினால் "மக்களையும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்பு செய்வதற்கான செயற்றிட்டத்தின்" கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாதாந்த கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "பிரதேச அபிவிருத்திக்கு சுகாதாரம், போசாக்குப் பற்றிய விழிப் புணர்வின் அவசியம்" என்ற தலைப் பில் ஊர்காவற்றுறை பொதுச்சுகா தார மருத்துவமாது திருமதி ரி.வசந்தா தேவியும் -

"பெண்கள் அபிவிருத்தியும் பிரதேச அபிவிருத்தியில் அவர்களின் பங்கு" என்ற தலைப்பில் ஊர்காவற்துறை பிரதேச சபை கணக்கு பதியுநர் சு.சுந்தரேசனும் உரை நிகழ்த்தவுள்ளனர். (எ-16)

✪ ✪ ✪

கொடிகாமம்,ஏப்.23

தென்மராட்சிப் பிரதேச செயலகத் தின் சமுர்த்தி மகா சங்கக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ஏ.ரகுநாதன் தெரிவித்தார்.

மகா சங்கத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-74)

### வினைத்திறமை காண் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவிருந்த கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதென பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-12)

## விஞ்ஞானச்சங்க ஆண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 12ஆவது ஆண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

காலை அமர்வில் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் செம்மண், கரையோர மணல் படிவுகள்' என்னும் பொருளில் கலாநிதி எஸ்.ரி.பி. இராஜேஸ்வரனும், 'மேற்கு நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களின் பொருளாதார நடவடிக்கைகள்' என்னும் பொருளில் என்.பேரின்பநாதனும் கருத்துரைகளை வழங்குவார்கள்.

பிற்பகல் 2மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பொது.அமர்வு ஆரம்பமாகும். பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் நடைபெறும் இப்பொது அமர்வில் 'யாழ்.குடாநாட்டின் நீர்வள முகாமைத்துவம்' என்னும தலைப்பில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் புதியதலைவரும் விவசாய பீடாதிபதியுமான எஸ்.இராஜதுரை கருத்துரை வழங்குவார்.

ஆர்வலர்கள் அனைவரையும் இவற்றில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

# விஞ்ஞானச்சங்க ஆண்டு விழாவில் பரிசு பெறுவோர் விவரங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்ப்பாணம் விஞ்ஞானச்சங்கம் 12 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையில் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், பாடசாலைகளின விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பரிசு பெறுவோர் விவரம் வருமாறு:

### எழுத்து மூல வினா விடைப்போட்டி

முதல் பத்து இடங்களைப் பெறுவோர் முறையே வருமாறு:-

சிறிசோதிநாதன் பகீரதன் - ஹாட்லிக்கல்லூரி, சண்முகநாதன் தனஞ்செயன் - ஹாட்லிக்கல்லூரி, சிவகுமார் தர்ஷண் - ஹாட்லிக்கல்லூரி, பி.சாலினி - வேம்படி மகளிர் கல்லூரி,

கே.ஷேஷானந்தன் - யாழ். இந்துக் கல்லூரி, தனுஜா - யாழ் இந்து மகளிர கல்லூரி, எஸ்.ருஷாந்தினி - நெல்லியடி ம.ம.வி., வி.கௌசல்யா - கொக்குவில் இந்துக்கல்லூரி, எஸ்.கார்த்திகா - பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி, கே.குணாளன் - நெல்லியடி ம.ம.வி.

### வாய்மொழி - வினாடி வினாப்போட்டி

ஹாட்லிக் கல்லூரி (முதலாமிடம்) சென்.ஜோன்ஸ் கல்லூரி - (இரண்டாமிடம்)

### பேச்சுப்போட்டி

க.சுகாஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி, (முதலாம் இடம்), கே.தர்ஷணன் - யாழ். இந்துக்கல்லூரி (2ஆம் இடம்), ரி.தனுஷா - நெல்லியடி ம.ம.வி (3ஆம் இடம்).

### கட்டுரைப்போட்டி

முதல் பத்து இடங்களைப் பெறுவோர் முறையே வருமாறு:-

எஸ்.மயூரதி - வேம்படி மகளிர் கல்லூரி, ரி.கஜந்தினி - மானிப்பாய் மகளிர் கல்லூரி, எச்.மரியதாஸ் - கிளி. முருகானந்தா மகாவித்தியாலயம், ரி.இனோதனன் - நெல்லியடி ம.ம.வி., எஸ்.அனோஜன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ரி.சந்திரகுமார் - யாழ்.இந்துக் கல்லூரி, வி.மதிவதனி - கிளி.இந்துக் கல்லூரி, எஸ்.காண்டீபன் - ஹாட்லிக் கல்லூரி, எஸ்.தர்மிளா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, எஸ்.தர்ஷனா கொக்குவில் இந்துக்கல்லூரி.(எ-8)

# சைப்பிரஸ் குறித்த ஐ.நாவின் பிரேரணையை வீட்டோவைப் பயன்படுத்தி நிராகரித்தது ரஷ்யா

நியூயோர்க்,ஏப்.23

சைப்பிரஸ் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக ஐநா.கொண்டுவந்த பிரேரணையை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்துள்ளது.

கிரேக்க சைப்பிரஸ் மற்றும் துருக்கி சைப்பிரஸ் என்று பிரிந்து கிடக்கும் சைப்பிரஸை ஒன்றிணைப்பதா இல்லையா என்பது குறித்து நாளை சனிக கிழமை இருபக்க சைப்பிரஸ் மக்களும் வாக்களிக்கவுள்ளனர்.

இந்தத் தருணத்தில் ஐ.நா. பிரேரணை மக்களின் வாக்களிப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அதனை நிராகரித்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மக்கள் கருததறியும் வாக்கெடுப்பு சுதந்திரமாக நடைபெறவேண்டும். எந்த அழுத்தங்களும் செல்வாக்குகளும இல்லாமல் அது நடைபெறவேணடும் என்று ஐ.நாவுக்கான ரஷ்யப் பிரதித் தூதுவர் ஜெனடி காடிலோவ தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஏனைய 14 உறுப்பு நாடுகளும் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்திருந்தன. முன்னதாக இந்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்ளுமாறு ஐநா. பொதுச்செயலர் கொபி அனான உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

புதிய சமாதான முயற்சிகளை முனனெடுத்தல், ஆயுதத் தடைகள் என்பன குறித்து இந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருப்பதால் அதனை ஆதரிக்குமாறு அனான் கோரினார்.

இரு சைப்பிரஸ்களையும் ஒன்றிணைப்பது குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் அண்மையில் நடத்திய பேச்சுக்களின் போது இணக்கம் ஒன்றைக் காணத்தவறிவிட்டனர்.

இதனை அடுத்தே மக்களிடம் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. வாக்கெடுப்புக்கான பிரசாரங்கள் அனைத்தும் நேற்று வியாழக்கிழமையுடன் இரு சைப்பிரஸ்களிலும் முடிவடைந்தன. கொபி அனானின் திட்டத்துக்கு இரு சைப்பிரஸ்களும் ஆதரவு அளித்தால் மே முதலாம் திகதி அது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துகொள்ளும்.

இதில் ஏதாவது ஒரு தரப்பாவது திட்டத்தை நிராகரித்துவிட்டால் கிரேக்க சைப்பிரஸ் மட்டும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துகொள்ளும்.

இதற்கிடையில் - கிரேக்க சைப்பிரஸ் துருக்கி சைப்பிரஸுடன் இணைவதாக ஐரோப்பிய ஒன்றியத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது என்று ஒன்றியத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உண்மையில் இணைப்புக்கு எதிராகவே கிரேக்க சைப்பிரஸ் ஆட்சியாளர்கள் பிரசாரம் செய்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிரேக்க சைப்பிரஸின் இந்த நடவடிக்கை தனக்கு வியப்பானதாகவும் பிரச்சினைக்குரியதாகவும் இருந்தது என்றும் அவர் மேலும் கூறினார்.

# அல் - கெய்டா தீவிரவாதிகளை வெளியேற்ற பாகிஸ்தான் பழங்குடி மக்களுக்கு காலக்கெடு

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான எல்லையில் அமைந்துள்ள வசிரிஸ்தான் மற்றும் வானா பகுதியில் பழங்குடி இன மக்கள் வசித்து வருகிறார்கள். ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து தப்பி ஓடி வந்த அல்-கெய்டா தீவிரவாதிகள் இங்கு பதுங்கி உள்ளனர். இவர்களுக்கு பழங்குடி இனமக்கள் ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்.

அல்-கெய்டா இயக்கத் துணைத் தலைவர் அல்-ஜவாரி இங்கு பதுங்கி இருந்ததாகவும் கூறபபட்டது. தங்கள் நாட்டில் பதுங்கி இருக்கும் அல்-கெய்டா தீவிரவாதிகளை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றும் நடவடிக்கையில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டது. இதற்கு பழங்குடி இன மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இறுதியில் அல்-கெய்டா தீவிரவாதிகளை வெளியேற்ற கால அவகாசம் தரும்படி பழங்குடி இன மக்கள் கேட்டனர். அதன்படி இரண்டு முறை கால அவகாசம் கொடுக்கப்பட்டது.

தற்போது அதுவும் முடிந்து விட்டதால் எதிர்வரும் 30ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுத்து இறுதிக் காலக்கெடு விதிக்கப்பட்டுளளது. பழங்குடி இனத்தைச் சேர்ந்த 52 பேர் பெஷாவர் நகர் தளபதியை சந்தித்து காலக்கெடுவை நீடிக்க கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (8)

# நேபாளத்தில் 1000 இற்கும் மேற்பட்டோரை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்தினார்கள்

காத்மாண்டு,ஏப்.23

நேபாள நாட்டில் இப்போது மன்னர் ஆட்சி நடந்து வருகிறது. அங்கு கம்யுனிஸ்ட் கொள்கைகளைக் கொண்ட குடியரசு நாடாக மாற்ற மாவோயிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியினர் கடந்த 1996 ஆம ஆண்டு முதல் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த முயற்சிக்குத் தடையாக இருப்பவர்களை அவர்கள் தீர்த்துக் கட்டுகிறார்கள்.

இதுவரை மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் 9 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். நேபாளத்தை கம்யுனிஸ்ட் நாடாக மாற்றும் முயற்சியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் நடவடிக்கை இப்போது அதிகரித்து வருகிறது.

கிழக்கு நேபாள நாட்டில் இந்திய எல்லையோரத்தில் உள்ள கிராமங்களில் இருந்து 1000 இறகும் மேற்பட்டவர்களை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளார்கள். 15 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்களே கடத்தப்படுகிறார்கள்.

லெனினின் பிறந்த நாளை சர்வதேச அளவில் கொண்டாட மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஏற்பாடு செய்தனர். அன்று மிகப் பெரிய கூட்டத்தைக் கூட்டுவதற்காகக் கிராம மக்களை அவர்கள் கடத்தினார்கள். லெனினின் பிறந்த நாள் கூட்டம் முடிந்ததும் பெருமபாலானவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

# வடகொரியத் தலைவரின் சீன விஜயம் முடிவு

வடகொரியத் தலைவர் கிம் ஜொங இல் தனது சீன விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பினார்.

அணுத்திட்டங்கள் குறித்த வடகொரியாவின் நிலைப்பாடு குறித்து சீனத் தலைவர்களுக்கு விளக்கிய பின் னர் அவரது இந்த விஜயம் முற்றுப் பெற்றது.

மிக இரசியமாக நடந்த இரு நாட்டுத் தலைவர்களதும் சந்திப்புக்கள் பற்றி விரிவான தகவல்கள் வெளியாகவில்லை. எனினும், அணுத்திட்டம் தொடர்பான தனது நிலைப்பாட்டில் கிம் ஜொங் சிறிது மென்மைப் போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அவரிடம் சீனா கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடகொரியத் தலைவரின் இந்த விஜயத்தின்போது அணுத்திட்டம் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டபோதும் இருநாடுகளிடையிலான பொருளாதாரம் பற்றியும் முக்கியமாக ஆராயப்பட்டது. தனது விஜயத்தின் இறுதி நாளன்று கிம் ஜொங் இல் சீனாவின் மாதிரிப் பண்ணை ஒன்றுக்கும் விஜயம் செய்தார்.

# லைபீரியப் போராளிகள் ஆயுதங்கள் கையளிப்பு

லைபீரியா,ஏப்.23

லைபீரிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான போராளிகள் தமது ஆயுதங்களை ஐநா. சமாதானப் படையினிடம் ஒப்படைத்துள்ளனர்.

முன்னணியின் பிரதித் தலைவர் பயோ பிளியூ தலைமையிலான 300 போராளிகள் தமது ஆயுதங்களை ஒப்படைத்துள்ளனர். அவர்களின் வலுவான தளம் அமைந்திருக்கும் புசனான் பகுதியில் இந்த ஆயுதக் கையளிப்பு இடம்பெற்றது.

சுமார் 40 ஆயிரம் போராளிகள் இவவாறு ஆயுதங்களை ஒப்படைத்து விட்டுத் தம்மிடம் சரணடைவார்கள் என்று ஐ.நா. அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். சரணடைபவர்கள் ஒவ்வொருவருக்கும் 300 அமெரிக்க டொலர் பணமும் தொழிற்பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

சுமார் இரண்டு மாதங்களாகப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டதன் பின்னர் ஐ.நா. தனது ஆயுதக் களைவு நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

லைபீரி ஜனநாய முன்னணியில் ஏராளமாக சிறுவர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் அநேகர் தமது அமைப்பை விட்டு விலகி சாதாரண வாழ்வுக்குத் திரும்புவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சுற்றுச்சூழல் மாசடைவதைத்தடுக்க வாகனங்கள் ஐதரசன் எரிபொருளைப்பயன்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வில் கலந்து கொண்ட மாகாண ஆளுநரும், பிரபல நடிகருமான அர்னோல்ட் ஸ்வாஸநேகர் காரொன்றுக்கு ஐதரசன் எரிபொருள் நிரப்புகிறார்.

# பாதுகாப்புத் தலைமையகம் மீது றியாத்தில் தற்கொலைத் தாக்கு!

## 10 பேர் உயிரிழப்பு; 148 பேர் காயம்!

றியாத்,ஏப்.23

சவூதி அரேபியத் தலைநகர் றியாதத்தில் உள்ள பாதுகாப்புப்படையினர் தலைமை அலுவலகம் மீது நேற்று முன்தினம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 10 பேர் கொல்லப்பட்டனர்; 148 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் இருவர் பாதுகாப்புப்படையினர்.

இந்தத் தாக்குதலை ஒஸாமா பின்லேடன் தலைமையிலான அல் கெய்டா தீவிரவாத அமைப்பே நடத்தியுள்ளது என்று றியாத் அதிகாரிகள் குற்றஞ்ச்சாட்டுகின்றனர்.

ஒஸாமாவின் வலைப்பின்னல் றியாதத்தில் காணப்படுவதால் அவசியமற்ற தனது பணியாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கடந்த வாரமே அமெரிக்கா உத்தரவிட்டிருந்தது.

மத்திய நஸீரியா மாவட்டத்திலுள்ள பாதுகாப்புத் தலைமைக் கட்டடமே தாக்குதலுக்கு இலக்கானது. தாக்குதலில் கட்டடம் பலத்த சேதமடைந்தது. பல கார்கள் அழிந்து போயின.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற மற்றொருசம்பவத்தில் தீவிரவாதிகள் சவூதிப்பொலீஸார் நால்வரைச் சுட்டுக்கொன்றுள்ளனர். தலைநகர் றியாத்துக்கு வடக்கே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹாசிம் மாகாணத்தில் உள்ள சோதனை நிலையம் ஒன்றில் கார் ஒன்றைப் பொலீஸார் வழிமறித்த போது அதிலிருந்தவர்கள் பொலீஸாரை நோக்கிச்சுட்டுவிட்டு இரு பொலீஸ் கார்களை எடுத்துக்கொண்டு தப்பி விட்டனர் என்று கூறப்பட்டது.

கடந்த திங்களன்று றியாத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதி ஒருவரும் இரவு நடைபெற்ற சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறுகின்றனர் அதிகாரிகள். அந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒரு தீவிரவாதியும் ஒரு பொலீஸாரும் கொல்லப்பட்டனர்.

இந்தச்சம்பவங்கள் குறித்து கருத்துத்தெரிவித்த பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரி ஒருவர் செப்ரெம்பர் 11 தாக்குதலை நடத்த அல்கெய்டாவுக்கு யார் உதவியாக இருந்தார்களோ அவர்களையே அல்கெய்டாவின் தீவிரவாதம் திருப்பித் தாக்குகின்றது என்றார்.

இந்தத் தாக்குதலை அடுத்துக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிபர் புஷ், தீவிரவாதம் குறித்து சவூதி அரேபியா மேலதிக கவனம் எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

# இன்னும் 30 ஆண்டுகளில் செவ்வாயில் மனிதர்கள்!

பெங்களூர்,ஏப்.23

அடுத்த 30 ஆண்டுகளில் செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வாழ்வார்கள் என்று இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியுள்ளார்.

பெங்களூரிலுள்ள பொதுத்துறை நிறுவனமான பாரத் எலக்ரோனிக்ஸ் (பெல்) நிறுவனத்தின் பொன்விழா ஆண்டுக்கொண்டாட்டம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியின் போது வீடியோ கொன்பரன்ஸ் மூலம் டில்லியிலிருந்து ஜனாதிபதி கலாம் பெல் ஊழியர்களிடையே உரையாடினார்.

அப்போது பெல் ஊழியர் அனுருத்தா எழுப்பிய கேள்விக்கு கலாம் அளித்த பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செவ்வாய்கிரக ஆராய்ச்சியில் மனிதர்கள் மிகவும் முன்னேறியுள்ளனா. அங்கு மனிதர்கள் குடியேறும் நாள் வெகுதொலைவில் இல்லை. நமது கிரகத்தில் தற்போது 600 கோடி மக்கள் தொகை உள்ளது. 2020 இற்குள் இது 800 கோடியாக உயரும்.

அப்போது நமக்குத் தேவையான கனிமங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும். இதனால் மற்றைய கிரகங்களிலிருந்து நாம் கனிமங்களை எடுக்கவேண்டியிருக்கும். சந்திரகிரகமானது வலுவான விண்வெளித் தொழில்துறை மையமாக அமையும்.

இந்தியா வலுவான நாடாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. ஒவ்வோர் இந்தியனும் புன்னகை பூக்கவேண்டும் என்பதுதான் எனது எண்ணம்.

இதுவரை 3 லட்சம் சிறார்களுடன் நான் பேசியுள்ளேன். தாய்நாட்டுப் பற்று அவர்களுக்கு அதிகம் உள்ளதை அப்போது கண்டேன். தாய்நாட்டுப பற்று பெற்றோர்களிடத்தில் இருக்கவேண்டும் தாய்நாட்டுப் பற்று வீட்டில் தொடங்கவேண்டும் என்றார் அவர்.

பெல் நிறுவனத்தில் அதிகளவில தமிழர்கள பணிபுரிகின்றனர். ஊழியர்கள் தமிழில் கேட்ட கேள்விகளுக்கு தமிழிலேயே பதிலளித்தார் கலாம். (க)

# சீனா தயாரித்த வரைபடத்தில் காஷ்மீர் இந்தியாவில் இல்லை

சனாவில் தயாரிக்கப்பட்ட உலக வரைபடத்தில் காஷ்மீர் பகுதியைக் குறிப்பிடாதது குறித்து டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அரசுக்கு டில்லி உயர்நீதிமன்றம் புதன் கிழமை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

வழக்கறிஞர் எஸ்பி.கௌதம் என்பவர் தாக்கல்செய்த பொதுநல வழக்கில், சீனாவில் தயாரிக்கப்பட்ட உலக வரைபடத்திலும், உருண்டையிலும் இந்தியப் பகுதியில் ஜம்மு காஷ்மீர் இடம் பெறவில்லை. இவைகள் டில்லி மார்க்கெட்டில் விற்பனைக்கு வந்துள்ளன. இதுகுறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

தலைமை நீதிபதி பி.சி.பட்டேல் மற்றும் நீதிபதி பி.டி.அகமது ஆகியோர் கொண்ட டிவிஷன் பெஞ்ச் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

இந்தப் புகார் குறித்து உள்துறை அமைச்சகம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை உடனடியாக நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கவேண்டும் என மத்திய அரசுக்கு அவர்கள் நோட்டீஸ் அனுப்பினார். (8)

# பக்ரைன் நாட்டின் முதல் பெண் மந்திரி

அரபு நாடுகளில் பெண்கள் உயர் பதவிக்கு அல்லது அரசியலுக்கு வருவது வழககம் இல்லை. பக்ரைன் நாட்டில் மட்டும் சில பெண்கள் தேர்தலில் போட்டியிட்டு எம்.பிக்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மற்ற அரபு நாடுகளில் ஒரு பெண் எம்பிகூடக் கிடையாது. பக்ரைன் நாட்டு நாடாளுமன்றத்தின் மேல்சபை உறுப்பினராக இருப்பவர் நாதா ஹாப்தா. பெண் டாக்டரான இவருக்கு மந்திரி பதவி அளிக்கப்பட்டுள்ளது. பக்ரைன் நாட்டின் சுகாதாரத்துறை மந்திரியாக நாதா ஹாப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை பக்ரைன் அரசர் ஹமாத் வெளியிட்டார். பக்ரைனில் மட்டுமின்றி அரபு நாடுகளில் கூட ஒரு பெண மந்திரியாவது இதுவே முதல்முறை. நாதா ஹாப்தா, சுகாதாரத்துறை அலுவலகத்தில் ஆலோசகராகவும், உலக சுகாதார அமைப்பிலும், யுனிசெப், ஐக்கிய நாட்டு குழந்தைகள் நல அமைப்பு ஆகியவற்றிலும் உறுப்பினராகப் பதவி வகித்து உள்ளார். விரைவில் சீரமைக்கப்பட இருக்கும் பக்ரைன் மந்திரிசபையில் அவர் புதிய மந்திரியாகப் பதவி ஏற்பார். (8)

இதோ! SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கான
சகலவிதமான காலுறைகள் (Socks)
வகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



ஸ்ரீமுருகன்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 2225892
(C/34581)(37-14-18)

பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் - 2004

**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை**

தலைவர்: திரு.வே.ஞானகாந்தன் (அதிபர்)
காலம்: 02.05.2004 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணி
இடம்: பாடசாலை "முத்துக்குமாரு அரங்கு"

**நிகழ்ச்சி நிரல்**

1. இறைவணக்கம்
2. தலைமையுரை – தலைவர்
3. பொதுக்கூட்ட அறிக்கையும் செயற்பாட்டறிக்கையும் – செயலாளர்
4. கணக்கறிக்கை – பொருளாளர்
5. சிறப்புரை – உதவிக்கல்விப்பணிப்பாளர்
6. புதிய நிர்வாக சபைத் தெரிவு
7. தீர்மானங்களும் முடிவுகளும்
8. இறைவணக்கம்

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறேன்.

பிரேரணைகள் யாவும் "செயலாளர்" யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.04.2004 இற்கு முன் சேர்ப்பிக்கவும்.

ந.சுந்தரராஜன்
கௌரவ செயலாளர்.
(C-34584)(34-21-14-18)

# வட்டுக்கோட்டைப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.23

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை தடுப்பூசி போடப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி முதல் 10.30 மணிவரை வட்டு. வடக்கு கற்பகச்சோலை சனசமூக நிலையத்திலும், 11மணி முதல் 12.30 மணிவரை வட்டுக்கோட்டை பிரதேச சபை அலுவலகத்திலும் பிற்பகல் 1 மணி முதல் 3 மணிவரை சங்கரத்தை குளத்தடி கிராம முன்னேற்றச் சங்கப பணிமனையிலும் தடுப்பூசி போடப்படும்.

அவ்வப்பகுதி மக்கள் அன்றைய தினம் தங்கள் வளர்ப்பு நாய்களுக்குத தவறாது தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-15)

## குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

நவாலி,ஏப்.23

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதியில் குடிதண்ணீருக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடும் வெப்பம் காரணமாக இங்குள்ள கிணறுகள் வற்றிப்போய்யுள்ளதுடன் உவர் நீராகவும் மாறிவருகின்றன.

இதனால் சில மைல் தூரத்திலுள்ள ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய நல்லதண்ணீக் கிணறை நாடி மக்கள் செல்கின்றனர்.

(ஒ-100)

## முகாமைத்துவ செயற்பாடு தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.23

மாநகர ஆணையாளாகள் உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், நகர சபைச் செயலாளர்கள், பிரதேச சபைச செயலாளர்கள் ஆகியோருக்கான முகாமைத்துவச் செயற்பாடு தொடர்பான வதிவிடக் கருத்தரங்கு எதிர் வரும் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் திருகோணமலை உப்புவெளியில் உள்ள காரியாலயத்தில் நடைபெறவுள்ளது

இதில் சம்பந்தப்பட்டவாகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-ரி)

## நூல் வெளியீடு

வலி. தென்மேற்கு,ஏப்.23

கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய 'சின்னப் பாப்பா பாட்டு' நூல் வெளியீடு நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அன்று பிற்பகல் 3.30 மணிக்கு "கலைச்செல்வி" ஆசிரியர் சி.சிவசரவணபவன் (சிற்பி) தலைமையில் வெளியீட்டு விழா நடைபெறும்.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையை வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி கி.விசாகரூபன ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

(ஒ-135-152)

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் குடும்ப சுகாதார சேவை அலுவலராகப் பணிபுரிந்த திருமதி டானியல் ஞானரத்தினம் கடந்தவாரம் தொடக்கம் பண்டத்தரிப்பு மற்றும் பிரான்பற்று பிரிவுகளுக்கான குடும்ப சுகாதார அலுவலராக இடமாற்றம் பெற்றுள்ளார். (ஒ-135)

**நீங்கா நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி**

அன்னையின் மடியில் 12 - 06 - 1951



ஆண்டவன் அடியில் 04 - 05 - 2003

**திருமதி ஈ.கணேசபாக்கியம்**

ஆறவில்லை எம்மனது வருடம் ஒன்றானதே
தேறவில்லை எம்மனது தேற்றுகின்றோம்
தேடுகின்றோம் நாம் கிடைக்கவில்லை
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு - ஆனால்
அம்மா என்ற சொல்லுக்கு யாருமில்லை!


- குடும்பத்தினர்

'ரவீன்ஸ் ரெலிக்கொம்
சிங்கத்தின் வீடு
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

T.P.: 021 - 226 3321
060 - 221 2408 (சி-34597) (21-14-18)

**3 ஆம் ஆண்டு நினைவுகளோடு...**

வீர ஜனனம் 23 - 04 - 1978



வீர மரணம் 22 - 04 - 2001

**மேஜர் பிருந்தன் (கண்ணன்)**
**கனகரத்தினம் கனகரூபன்**

தரணி போற்றும் தலைவன் தாணையில்
காவியம்படைத்த எம் இனிய பிருந்தா!
எமை மறந்து ஆண்டுகள் மூன்று ஆகினவே
உனைப் பிரிந்து வாழும் உறவுகளின் நினைவில்
என்றும் நீ நிரந்தரமாய் உறைகின்றாய்!
தேச விடுதலைக்காய் தேகத்தை ஈந்த கண்ணே!
எங்கள் கண்ணீரும் கவலைகளும் உன் இதயத்தை
நெருடவில்லையா?

- இனிய உறவுகள்.

சாவகச்சேரி.
(சி-34596) (24-21-14-16)

**91 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

அன்னையின் மடியில் 1976 – 07 – 28



இறைவன் அடியில் 2004 – 01 – 24

**செல்வி சாந்தினி மகாலிங்கம்**

வராது வந்த ஆரமுதே
அள்ளியணைக்கும் அன்பு மகளே!
தீராத துன்பம் தந்து
தேடாத தூரம் சென்றாயோ?
சென்ற இடம் சொல்லாயோ?
எம் மனம் தவிக்குதடி!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (23-04-2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"அறிவாலயம்",
கரணவாய், கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(31159)(34-21-14-18)

**45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

மலர்வு 07 - 02 - 1976



உதிர்வு 10 - 03 - 2004

**செல்வி சுபாஜினி பாலசிங்கம்**
**(சுபா)**

அன்புடன் வாழ்ந்து அகிலத்தில் பண்புடன் திகழ்வாய்
என்று காத்திருந்த வேளையில் அந்தப் பொல்லாத
காலனவன் இன்னுயிர் கவர்ந்து செல்ல வந்தானோ?
உனைக் காப்பாற்ற வந்த உள்ளங்களை ஏமாற்றிச்
சென்றுவிட்டாயே! என் செய்வோம் நாம்?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணா ச.ச.நி,
கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு.

பிரிவால் வருந்திநிற்கும்:
அன்புக் குடும்பத்தினர்.

(31138)(38)

**சமையலுக்கு ஆள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற உல்லாச விடுதிக்கு உள்ளூர், மேல்நாட்டு உணவு வகைகளைச் சமைக்கக் கூடிய சமையலாள் தேவை.

தொடர்பு:
விளம்பர இல.2234,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.
(31134)

**தேவை**

பிரபல எலக்ரோனிக் நிறுவனத்திற்கு விற்பனையாளர் தேவை. இருபாலாரும் நேரில் சமுகம் தரவும்.

01C, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் அருகில்)
(C34578)

# மரண அறிவித்தல்

**சூசைமுத்து அன்ரனி**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.05, ராசாவின் தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்டவரும் இல.182, பிரதான வீதி, கெக்கராவ றோயல் சலூன் உரிமையாளருமாகிய சூசைமுத்து அன்ரனி அவர்கள் 18.04 2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைமுத்து - லூசியா அவர்களின் புதல்வரும் மனோன்மணி (வேவி)யின் அன்புக் கணவரும் பபிதா, பகீரதன், சுஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற அரியகுட்டி மற்றும் சவினம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஹென்றிகைப்பா மற்றும் எட்வின்அம்மா, றெயினா, மரியதாஸ், டைசன் (பிரான்ஸ்), சுகிர்தசீலி ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகம்மா, வஸ்ரியாம்பிள்ளை, காலஞ்சென்ற யோகராஜா மற்றும் திலகா (பிரான்ஸ்), செபஸ்ரியாம்பிள்ளை மரியதாஸ், காலஞ்சென்ற சற்குணம் மற்றும் நெல்சன் (கனடா), சிறில் (கனடா), றோஸ்மலர் (றதி) ஆகியோரின் மைத்துனரும் எமலியான்ஸ்ஸின் சகலனாரும் மனோகரா, சந்திரா (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ராஜேஸ்வரன் (கனடா), அமலேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), லோகேஸ்வரன் (கனடா), டெய்சி (கனடா), சந்திரா (கனடா), வயிலெற், கிரியா, யசிந்தா (கனடா), சகாயராஜா, மகிந்தராஜா, கபிலஷ், தர்ஷினி, தனிஷ்காந் (பிரான்ஸ்), எட்மன், மேளின், எமில்ராஜ், சுரேஷ் (லண்டன்), சஞ்சீவ், ஜினிற்றன் (கனடா). ஜினோசன், ஜலக்ஷன் (கனடா), ருஜேக்கா (கனடா), சுபாஜினி (கனடா), சிந்துஜா, தனுஷியா ஆகியோரின் மாமனாரும் ஜனா, நிஷா, வினோ (பிரான்ஸ்), பிரியங்கா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் வாசு (சுவிஸ்), அருள், அசோகன் (ஜேர்மனி), ஆனந்தி, விஜி (கனடா), நித்தி (கனடா), ஆனந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கிலுள்ள ராஜா ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் இல்லத்தில் இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை பி.ப.3மணியளவில் நடைபெற்று, யாழ். அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
அ.எமலியன்ஸ்
(சகலன்).

(31157) (26-1?-18)

உதயன்

## கருணாவின் தம்பட்டம்

நாற்பத்தியொரு நாள்கள் வாய்வீச்சுக் காட்டிய கருணாவும் அவரது பேச்சாளர் வரதனும் 'பின்னங் கால் பிடரியில் அடிபட' ஓடித்தப்பி, தலைமறைவான பின்னரும் தங்களின் தம்பட்டம் பண்ணும் போக்கை இன்னும் விட்டுவிட்டதாக இல்லை.

தாய்லாந்தில் இருந்து வெளியாகும் 'ஏஸியா ட்ரிபியூன்' இதழுக்குத் தொலைபேசி மூலம் அளித்த பேட்டியில் வரதன் போட்ட வாய்ப்பந்தல் அதனைத் தான் காட்டுகின்றது.

விடுதலைப் புலிகளின் தலைமைக்குக் கீழ்ப்படா மல் விலகி, தம்பாட்டில் இயங்கப் போவதாக மார்ச் முதல் வாரத்தில் கருணா அறிவித்த போதே அவரின் எதிர்காலம் என்னவென்பது தமிழ்மக்களுக்குத் தெரிந்துவிட்டது.

ஒரு கொள்கையும் இல்லாமல், இலட்சியமோ உறுதிப்பாடோ இல்லாமல், வெறும் பிரதேச வாத வெறியை மட்டும் கிளப்பியபடி கருணா மார் தட்டிய போதே அவரது மதி விலகிவிட்டதைத் தமிழ்மக்கள் உணர்ந்துகொண்டனர்.

என்றாலும், தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் - குறிப்பாக இலங்கை விவகாரத்தில் தனிப்பட்ட நோக்கமும் சிரத்தையும் கொண்ட இந் திய மற்றும் சில பிறநாட்டு ஊடகங்கள் - கொடுத்த கயற்றில் தன்னையும் தனது பலத்தையும் பற்றி அதி கம் கற்பனை பண்ணிக்கொண்டு துள்ளிக்குதித்தார் கருணா.

கருணாவின் வாய்ச்சவடாலைப் பார்த்து இந்த ஊடகங்கள் அவர் குறித்து அதீத நம்பிக்கை கொள்ள...

அந்த ஊடகங்கள் தம்மைப் பற்றி வெளியிட்ட அதீத புனைகதைச் செய்திகளைப் பார்த்து கருணா பெருமிதம் கொண்டு தம்மைப்பற்றி அதிகம் அதிக மாகக் கற்பனை பண்ணிக்கொள்ள...

ஒரு சில வாரங்களுக்கு கிழக்கில் இந்த 'எடுப்பு' பெரிதாக எதிரொலித்தது.

ஆனால், தாயக மண்ணிலிருந்து கருணாவை அகற்றும் அதிரடி நடவடிக்கையை விடுதலைப் புலி கள் ஈஸ்டர் வெள்ளியன்று ஆரம்பித்த போதுதான், கருணாவுக்குத் தன் பலமும், கருணாவுக்குக் கயிறு கொடுத்து அவரது நிலையை விஸ்வரூபப்படுத்திப் பிரதிபலித்த ஊடகங்களுக்குக் கருணாவின் பலமும் ஒரே கணத்தில் புரிய ஆரம்பித்தன.

கொள்கைப்பற்றும், விடுதலை வேட்கையும், இலட்சிய உறுதிப்பாடும் உடைய புலிகளின் தலை மைக்கு முன்னால் தாம் தூசுக்குச் சமன் என்பதை உணர்ந்த கருணா, புலிகளின் நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டதும் ஒருநாள் கூட நின்று தாக்குப்பிடிக்க முடியாமல் - 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று கூறுமளவுக்குப் புறமுதுகிட்டு ஓடித் தப்பித் தலைமறைவானார்.

கிழக்குப் போராளிகளைத் தனது கெடுபிடியால் அடக்கிவைத்து அதைத் தனது பெரிய பலமாகக் காட்டி, பிரசாரப்படுத்திய கருணாவுக்கு அது பயன் தராது என்பது காலம் கடந்தே புரிந்தது.

தனது குற்றங்கள் அம்பலமாகி, அக்குற்றங் களுக்குரிய தண்டனைக்கும் தாம் ஆளாகலாம் என்ற பீதியில் பிரதேசவாத வெறியைக் கையிலெடுத்துக் கொண்டு, விடுதலைப் போருக்குத் துரோகம் இழைக்க முற்பட்டவர் அவர்.

இறுதியில், அந்தத் துரோகச் செயலுக்குத் துணை நின்ற தனது நெருங்கிய சகாக்களைக் கூட நட் டாற்றில் தவிக்கவிட்டு ஓடித்தப்பும் பரிதாபநிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் விடு தலைப் புலிகளின் தளபதியாக ஒன்றரைத் தசாப்த காலம் செல்வாக்குச் செலுத்திய கருணா, தனது கேவலமான புத்தியால் - போக்கால் - தனது மக் களுக்குள்கூட ஒளிக்க முடியாமல் ஓடித் தாயகத் துக்கு வெளியில் தலைமறைவான நிலையிலாவது தமது தவறை - குற்றத்தை - உணர்ந்திருப்பார் என்றே தமிழ் மக்கள் நம்பினர்.

ஆனால், அது அப்படியல்ல என்பது அவரது - தற்போதைய கடைசி நேரம் வரையான உதவி யாளர் வரதன் - அவர் சார்பில் அளித்திருக்கும் பேட்டியிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

ஒரு பெரிய படையணியைத் தனது கட்டுப்பாட் டில் வைத்திருந்த சமயத்தில் கூட, புலிகளின் அணியை எதிர்க்கத் திராணி இல்லாது புறமுதுகிட்ட கருணா, இப்போது தலைமறைவாக இருந்து கொண்டு தம்பட்டம் அடிக்கிறார். தன்னைப் பற்றிப் பீற்றிக் கொள்கின்றார்.

தமிழ்மக்களுக்கு - ஏன் சர்வதேச உலகுக்கு - கருணா என்ற நம்பிக்கைத் துரோகியின் தலைமை யும், பலமும் என்னவென்பது இப்போது அம்பலமாகி விட்டது. இதற்குப் பின்னரும் தமது வெற்று வேட்டு வாய்ச்சவடால் எடுபடாது என்பதை உணர்ந்து கொண்டு வாய்மூடி, மௌனம் காத்து, தாம் மறைந்தி ருப்பதற்கான வசதிகள் - வாய்ப்புகள் குறித்துக் கவ னம் செலுத்துவதே அவரது பாதுகாப்புக்கும் நல் லது; அவருடன் ஒளிந்திருப்போருக்கும் நல்லது.

# கருக்கலைப்பால் ஆபத்துக்குள்ளாகும் பெண்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

## பாதிப்புக்குள்ளான பலர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ். குடாநாட்டில் சட்டவிரோதக் கருக்கலைப்பு மூலம் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக யாழ்.மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதக் கருக்கலைப்பு மூலம் பாதிப்புக்குள்ளான பல பெண்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காலம் கடந்து கருக்கலைப்பில் ஈடுபடும் பெண்களே அதி களவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்க ளில் சிலர் உயிராபத்தையும் எதிர்கொள்கின்றனர்.

மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 20 பெண்கள் சட்டவிரோதக் கருக்கலைப்பு மூலம் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் -

இவர்களில் 90 வீதமானோர் திருமணமாகாதவர்கள் என்றும் - வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

அண்மைக்காலங்களில் சட்டவிரோதக் கருக்கலைப்பில் ஈடு பட்டுப் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண்க ளில் பலர் பருத்தித்துறை, கிரான்பற்றைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவரிடமே கருக்கலைப்பை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அப்பெண்மணியைத் தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை -

அண்மைக்காலமாக சட்டவிரோத கருக்கலைப்புத் தொடர் பான வழக்குகளும் நீதிமன்றங்களில் அதிகரித்திருப்பது நீதி மன்றப் பதிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது. சட்டவிரோதக் கருக்கலைப்பில் ஈடுபட்ட சிலருக்கு எதிராகப் பொலீஸார் நீதிமன் றங்களில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ஒ-8-6)

# மணல் அனுமதிப்பத்திரம் வழங்கும் பணி யாழ். செயலகக் கண்காணிப்பின் கீழ்

வடமராட்சி,ஏப்.23

வடமராட்சி கிழக்கிலிருந்து மணல் பெறுவதற்கான அனு மதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் யாழ். செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென ஆர்.சிவபுண்ணியம் என்ற உத்தியோகத்தர் யாழ். செயலகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை, தும்பளையில் இயங்கும் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதி பர் அலுவலகத்தின் உப அலுவலகத்திலிருந்து பணிகளை மேற் கொள்ளவுள்ளார்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் கட்டடப் பணிகளுக்குத் தேவையான மணலைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை காலமும் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தின் உப அலுவலகமே அனுமதிப்பத் திரங்களை வழங்கிவந்தது.

புதிய நடைமுறையின்படி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் பிரதேசங்களும் அதற்கான கிழமைகளும் வருமாறு:-

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகள் - திங் கட்கிழமை, கோப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு கள் - செவ்வாய்க்கிழமை, நல்லூர், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகள் - புதன்கிழமை, பருத்தித்துறை, தெல்லிப்பழை, தீவ கம் பிரதேச செயலர் பிரிவுகள் - வியாழக்கிழமை, கரவெட்டி, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுகள் - வெள்ளிக்கிழமை.

அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கான மணலைக் குடத்தனை - மணல்காட்டுப் பகுதிகளிலிருந்து பெற்று வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக்கழகம் வழங்கும். (8-173)

# உடல், உளப் பாதிப்படைந்தோருக்கு மறுவாழ்வு வழங்கும் திட்டம் நடைமுறை

யாழ்ப்பாணம்,ஏப்.23

குடாநாட்டில் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர் களுக்கு அவர்களது இருப்பிடங்களில் வைத்து மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றை யாழ்.செயலகம் நடைமுறைப்படுத்த விருக்கின்றது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் யாழ்.செய லகத்தின் வழிகாட்டலில் பிரதேச செயலகங்களால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

கடந்தகால யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு ஊன மடைந்தவர்கள், உளத்தாக்கத்துக்கு உள்ளானவர்கள் போன்ற வர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது வீடுகளில் வைத்து அவர்களின் கல்வி நிலை மற்றும் வாழ்க்கை நிலையை மேம் படுத்தல், சுயதொழில் வேலைவாய்ப்பு அளித்தல் போன்ற செயற் பாடுகள் இத்திட்டம் மூலம் செயற்படுத்தப்படும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த கிராம சேவையாளர் மட்டத்தில் சேவைமனப்பான்மையுடைய தொண்டர்கள் பத்துப் பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வீடுவீடாகச் சென்று உள, உடல் பாதிப்புக்குள்ளானவர்கள் விவரங்களைச் சேகரிப்பர். அத்துடன், அவர்களுக்கு எந்தவகையான உதவிகள் வழங்க வேண்டும் என்றும் ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பர்.

இது தொடர்பான அறிக்கைகளை கிராமசேவையாளர் மற்றும் சமூகசேவை அதிகாரிகளுடன் ஆராய்ந்து பிரதேச செயலர்கள் நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

தெரிவுசெய்யப்பட்ட தொண்டர்கள் மற்றும் அதிகாரிகளுக் கான கூட்டம் நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாய கம் போல் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இத்திட்டம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. (ஒ-3-5)

# புங்குடுதீவில் உவர்நீர்த் தடுப்பு அணை அமைக்கத் திட்டம்

மண்டைதீவு,ஏப்.23

புங்குடுதீவு மேற்குப பகுதியில் உள்ள ஊரதீவு கிராமத்தைச சுற்றிப் பல லட்ச ரூபா பெறுமதியான கடல் அணை ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

காலத்திற்குக் காலம் கடல் நீர் பெருக்கெடுத்து நுழையும் இந்தக் கிராமத்தில் தாழ்ந்த பகுதிகளைச் சூழ உவர் நீர்த் தடுப்பு அணை அமைப்பதற்கான நிதியை 'நியாப்' ஒதுக்கியுள் ளது. நான்கு கட்டங்களாக நடைமுறைப்படுத்தவுள்ள இந்த வேலைத் திட்டத்திறகு 35 லட்சம் ரூபா ஒதுககப்பட்டுள்ளது.

ஆரம்ப வேலைத்திட்டம் 9 லட்சம் ரூபா நிதியுதவியுடன் ஒப் பந்த அடிப்படையில் ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பாரிய அணைத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், நன்நீர்தேக்கம் ஒன்றை உருவாக்குதல், குடிதண்ணீர்ப் பிரச்சினையை நீக்குதல் மற்றும், விவசாய உற்பத்தியைப் பெருக் குதல் ஆகிய திட்ட இலக்குகள் அடையப்படும் என்று ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.கே.சண்முகலிங்கம் தெரிவித்தார். (ஒ-88)

**நாளை**

சித்திரை 12
சனிக்கிழமை
(24.04.2004)
திதி : பஞ்சமி
பின்னிரவு 3.58 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
மாலை 6.59 வரை.
சுபநேரம்: 3.00 - 4.30
ராகுகாலம்: 9.00 - 10.30
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

எல்லாச் செயல்களாலும் ஒருவனுக்கு இன்பம் கிடைப்ப தில்லை.

# 'வெளிச்சம்' சஞ்சிகையின் 85ஆவது இதழ் வெளிவந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.23

விடுதலைப் புலிகளின் கலை,பண்பாட்டுக்கழகத்தின் வெளி யீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் 85ஆவது இதழ் வெளி வந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத்தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கருத்துரை இடம்பெற்றுள்ளது. அத்துடன் நேசன், ந.சத்தியபாலன், திரேசா, ஞானரதன், முல்லைமணி ஆகியோரின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மாலிகா, த.அகிலன், பொன்.காந்தன், த.ஜெயசீலன், வேல்.லவன், கோபால்நாதன், புதுவை இரத்தின துரை, கருணை ரவி, சோதியா, கல்வயல் வே.குமாரசாமி, இத் தாவில் க.சிவராசா ஆகியோரின் கவிதைகளும் இடம் பெற் றுள்ளன.

இவற்றுடன், முத்து இராதாகிருஷ்ணன், முல்லை ஜேசு தாசன், யோ.கர்ணன், ச.முருகானந்தம், தேஜோமயன் சிவாஜினி, சிவசங்கர் ஆகியோரின் சிறுகதைகளும் சோ.பத்மநாதனின் மொழிபெயர்ப்புக் கவிதைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இந்நூல், தூது, அஞ்சலி போன்ற அம்சங்களையும் உள்ள டக்கி வெளிவந்திருக்கிறது. ஆசை. இராசையாவின் ஓவியம் இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கிறது. (ஒ-9)

# தற்போது நிலவும் வெப்பநிலை மே மாத இறுதிவரை தொடரும்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.23

நாட்டில் தற்போது நிலவும் வெப்ப அழுத்தக் காலநிலை மே மாத இறுதிவரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

வடமேற் பருவப்பெயற்சி மழை ஆரம்பிக்கும்வரை இந்த வெப்ப அழுத்தமான காலநிலை தொடரும் என திணைக்களத் தின் பணிப்பாளர் சமரசிங்க தெரிவித்தார்.

வடஅரைக் கோளத்தின் கடற்பரப்பில் நிலவும் வெப்பம் காரணமாக ஆவியாகிய நீரைச் சுமந்துவரும் காற்று இலங் கையை நோக்கி வீசுவதால் இரவு வேளைகளில் அதிக வெப்ப நிலையுடன் கூடிய காலநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை - இலங்கைக்கு அண்மையில் சூரியன் வலம் வருவதனால் பகல் வேளைகளில் அதிக வெப்பம் காணப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வளிமண்டலத்தில் ஈரப்பதன் அதிகரித்தாலும் பகல் நேரங் களில் காற்று குறைவாக வீசுவதாலும் அதிக வெப்பநிலை யான காலநிலை நிலவுகிறது என்றும் அத்துடன், பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்திருந்ததாலும் நாட்டின் பல பகுதி களுக்கு உரிய முறையில் மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை என வும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது(8)

# முகமாலை, பளைக்கு விரைவில் மின்சாரம்

கொழும்பு,ஏப்.23

முகமாலை மற்றும் பளைப் பகுதிக்கு மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

- இவ்வாறு இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வன்னிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள் ளப்பட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பளை, முகமாலைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கும் ஏ-9 வீதியிலுள்ள இராணுவச் சாவடிகளுக் கும் மின்சாரம் வழங்கப்படும் என்றும் - இதன்மூலம் முகமாலை ஊடான போக்குவரத்து 24மணி நேரமும் இடம்பெற வாய்ப்பேற் படும் என்றும் -

அவர் மேலும் கூறினார். (ஒ-ரி)

## ரஷ்யா உதவி

இலங்கையின் வடமேற்குக் கடற் பகுதிகளில் எண்ணெய் வளத்தைக் கண்டறிய ரஷ்யா உதவவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக முறையான திட்டம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்க தாம் தயார் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் மிக்கல் ஹற்போஸ் தெரிவித்தார்.

# 700 சுடுகலன்களுடன் பெட்டி புல்மோட்டைக் கடலில் மீட்பு!

கொழும்பு,ஏப்.23

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைக்குச் சமீபமாகவுள்ள கடல் பிராந்தியத்தில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் கொண்ட பெட்டியொன்று புல்மோட்டைப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சுமார் 60 யார் ஆழத்தில் இந்தப் பெட்டி கண்டெடுக்கப்பட்டதாகவும் ரி-56 ரகத் துப்பாக்கிகள் உட்பட சுமார் 700 ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் அதில் காணப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் பொலீஸாருக்குச் செய்த முறைப்பாட்டை அடுத்தே சுழியோடிகள் மூலம் இந்தப் பெட்டி கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-க)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 05 1937



மறைவு 14 04 1994

**அமரர் மாணிக்கம் கந்தசாமி (முத்துலிங்கம்)**

(யாழ். உயரப்புலம் மெ. மி. த. க. பாடசாலை ஆசிரியர்)

திதி: 23.04.2004

ஆண்டுகள் பத்தாண்டு உருண்டு ஓடினாலும்
எம் நினைவில் நிறைந்திருக்கும்
குல விளக்கே!

"திருவேரகம்",
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(31146) (38-14-19-26)

## கூரையில் இருந்து வீழ்ந்து இளைஞன் படுகாயம்!

தென்மராட்சி,ஏப்.23

வீட்டுக் கூரைக்கு சலாகை அடித்துக்கொணடிருந்தவர் தவறி வீழ்ந்து காயமடைந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை கொடிகாமம் எருவன் பகுதியில் இடம்பெற்றது.

தவறி வீழ்ந்ததில் கை முறிந்ததுடன், இடுப்புப்பகுதியில் தடி குத்திக் காயப்படுத்தியுள்ளது. அத்துடன், வீட்டின் அருகில் உள்ள முட்கம்பிவேலி மீது வீழ்ந்ததால் முட்கம்பிகள் உடம்பின் சில இடங்களில் கீறி காயம் ஏற்பட்டிருந்தது.

கொடிகாமம் எருவன் பகுதியைச் சேர்ந்த சின்னையா கமலநாதன் (வயது25) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (எ-117)


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

டோகா, கட்டார் ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பு உண்டு.

| | | | |
|---|---|---|---|
| மேசன் | -5 | ஸ்பிறேபெயின்ரர் | -2 |
| கூலி | -5 | வெல்டிங் | -2 |
| தச்சுவேலை | -5 | ரிங்கர் | -2 |
| எலக்ரிசன் | -2 | | |

உடன் தொடர்புகொள்ளவும்.

ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8.30 - 10.00 மணிவரை

வெளியூர் நம்பர் - 009745309804.

(சதீஷ் - வெள்ளி மட்டும் தொடர்புகொள்ளலாம்.)

உள்ளூர் விலாசம்: ரூபன் போட்டோ, வீடியோ
உடுவில் வீதி, மானிப்பாய்

(31142) T.P No - 021 4590625. (40-14-19-26)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**செபஸ்ரி லூக்காஸ் (ரெத்தினம்)**

மண்ணில் 31.10.1945 விண்ணில் 24.03.2004

முப்பத்தொரு நாள் ஆகினும்!
ஆறவில்லை - எமது துயரம்!
நீண்டதோர் சோகமாய் நிலைத்திடவே
வைத்தீரே!
பூண்ட நாள் அன்பால் புலம்புகின்றோம்!
அப்பா மீண்டும் நீங்கள் எப்போது
எம்மிடையே வருவீர்கள்?

தகவல்:
ரவி குடும்பத்தினர்
(சுவிஸ்).

T.P: 0041-552102053
079 7568400. (31092) (14-19-26)


## இலங்கைச் சட்டக் கல்லூரி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

கல்வியாண்டு 2005இற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இலங்கைச் சட்டக் கல்லூரி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இம்மாதம் 19ஆம் திகதி முதல் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணபங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 31-05-2004.

விண்ணப்பப்படிவத்தையும் கடந்தகால வினாப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, Incorporated Council of Legal Education இன் பெயரில் Hatton National Bank இன் Hulftsdorp கிளையில் 01-18041-01-1 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படக்கூடியதாக எந்தவொரு HNB கிளையிலும் ரூபா 475/=ஐச் செலுத்தி மூலப் பற்றுச்சீட்டினைச் சட்டக் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். வங்கிப் பற்றுச் சீட்டில் தங்களது பெயரை முதலெழுத்துடனும் தேசிய அடையாள அட்டை இலகத்தையும் குறிப்பிடவும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபால் மூலம் பெறவிரும்புவோர் வங்கிப் பற்றுச் சீட்டையும் சுயவிலாசமிடப்பட்ட 15" X 10" அளவிலான தபால உறையுடன் தபால் செலவுக்கான ரூபா 84/= பெறுமதியான முத்திரையையும் அனுப்புதல் வேண்டும். அனுப்பவேண்டிய முகவரி

**The Principal,**
**Sri Lanka Law College,**
**244, Hulftsdorp Street, Colombo - 12.**

குறிப்பு:

☆ கல்வித்தகைமை மற்றும் நுழைவுப் பரீட்சை தொடர்பான விவரங்களுக்கு 08-04-2004 அன்று வெளியான 'உதயன' பத்திரிகையைப் பார்க்கவும்.

☆ மேற்படி நுழைவுப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றவுள்ள மாணவர்களுக்காக இலங்கைச் சட்டக் கல்லூரி - சட்ட மாணவர் இந்து மகாசபை ஏற்பாடு செய்துள்ள மே மாதத்திற்கான வகுப்புகள் மே 4ஆம், 5ஆம் திகதிகளில் காலை 9.30முதல் மாலை 4.30மணி வரை யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

☆ 21.04.2004 இல் வெளியாகிய விளம்பரத்தில் விண்ணப்பப்படிவம் ரூபா 450/= எனக் குறிப்பிட்டிருந்தோம். அது தவறானது. ரூபா 475/=ஐ வங்கியில் செலுத்தவும்.

சட்ட மாணவர் இந்து மகாசபை,
இலங்கைச் சட்டக்கல்லூரி.

விளம்பர அனுசரணை:

குமரன் புத்தக இல்லம்,
201, டாம் வீதி,
கொழும்பு - 12.

N.பாஸ்கரன்,
நெல்லியடி,கரவெட்டி,
J-1/10, Anderson Flats,
Colombo - 05.

(C/34560) (19-14-26)



## இதோ எதிர்பாருங்கள்!

### இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்

## வெளிப்படுத்தின விசேஷ கூட்டங்கள்

இதுவோர் அரிய சந்தர்ப்பமாக மீண்டும் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையைப் பற்றிய எக்காளம் முழங்கப்போகிறது. இந்த எக்காளச் சத்தத்தைக் கேட்க அனைவரும் திரண்டு வாருங்கள்; வந்து வேதத்தின் அதிசயத்தைக் காணுங்கள்.

காலம்: ஏப்ரல் 2004
19 முதல் 23 வரை
26 முதல் 29 வரை

தினமும் மாலை 4.30 மணிக்கு

இடம்: பெத்தேல்,
104, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

உங்கள் கவனத்துக்கு!

24ஆம், 25ஆம் திகதிகளில் விசேஷ விடுதலைக்கான கூட்டம்; 24ஆம் திகதி காலை 10மணிக்கும் 25ஆம் திகதி மாலை 4.30 மணிக்கும் நடைபெறும்.

உங்கள் வாழ்வில் தீராத வியாதிகள், பில்லி சூனியக் கட்டுக்கள், காரணமில்லாத தோல்விகள், மனவிரக்தி, தலைமுறை சாபங்கள், பாசபழக்கவழக்கங்கள் இவை யாவற்றிலுமிருந்து விடுதலைபெற யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாவும் இலவசம்! (30965) (26-14-19) T.P.:021 222 6458.



மூன்று ஆண்டுகளில் → இந்தியாவில் கல்வி → A/L பரீட்சையின் பின்னர் → பெங்களூர் பல்கலைக்கழக பட்டம்

# பிரிந்தாவன் கல்லூரி

# BRINDAVAN COLLEGE

(முன்னர் தேசிய முதல்தரக் கல்லூரி)

2nd Cross, Bhoopasandia, RMV Extn. 2nd Stage, Bangalore 94
Tele: (0091-80) - 23414557, 23417833 Fax 0091 -80-23615621, 23417832
E.mail : nfgc @ bgl. vsnl. net. in. Web site : www.nfgcollege.com.

இளநிலைப் பட்டப்படிப்புப் பாடநெறிகள்

- B.Sc. - உயிரி தொழில்நுட்பம்
- B.Sc. - மரபணுவியல்
- B.Sc. - நுண்ணுயிரியல்
- B.Sc. - கணனி விஞ்ஞானம்
- B.B.M. - தொழில் முகாமைத்துவம்
- B.C.A. - கணனி பிரயோகம்
- B.Com. + வர்த்தகம் + கணனி

பட்டப்பின் படிப்பு பாடநெறிகள்

- M.Sc. - நுண்ணுயிரியல்
- M.Sc. - உயிரி தொழில்நுட்பம்
- M.B.A.- தொழில் நிர்வாகம்
- M.C.A.- கணனி பிரயோகம்

Company Secretarial Services (Pvt) Ltd.
# 285 C- 1/1, ஸ்ரான்லி திலகரட்ண மாவத்த,
யூபிலி போஸ்ற், நுகேகொட.
Tel : 011- 2854438 / 0777- 387273
E-mail : Yapadd @ Sol.lK.

## இலவசக் கருத்தரங்கு

சித்திரை மாதம் 25ஆம் திகதி ஞாயிறு
காலை 10.00 மணிக்கு

### உடனடி அனுமதிகள் (Spot Admissions)

ஏப்ரல் 25ஆம், 26ஆம் திகதிகளில் காலை 11.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை.

கொழும்பு ஹில்டனில்
அதிபர்/ நிர்வாக நம்பிக்கையாளரால் நடத்தப்படும்.

கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டம்/ தவணைமுறைக் கட்டணம்/கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.


(C/34562) (40-14-19-26)

பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் 2004 ஆம் ஆண்டு A/L மாணவர்கள் ஒதுக்கீடு பெறலாம்;
ஒரு வருடத்தைச் சேமிக்கலாம்.

- தகுதிகள்: 2 A/L சித்திகள்.
- 100% பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. அவை யாவும் முதலாம் வகுப்புச் சித்திகள்.
- M.Sc. நுண்ணுயிரியல் முதுமாணித் தேர்வில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளது.
- 260 இலங்கை மாணவர்கள் 41 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்வி பயில்கின்றனர்
- ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனியான விடுதி வசதிகள்.
- கடந்த 10 ஆண்டுகளில் 250 இலங்கை மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.
- ICCR ஊடான புலமைப் பரிசில் உண்டு.
- முற்பதிவுக் கட்டணம் USS 400

மேலதிக விவரங்களுக்கு திரு. எம்.குணசேகர.
038- 2232657. 038-2234154.

# புதிய அரசின் முன்னுள்ள முக்கிய பிரச்சினை



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான யோசனைகள் இன்னமும் பூர்த்திசெய்யப்படவில்லை. ஆனால், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையையும் இப்போதுள்ள தேர்தல் முறையையும் ஒழித்துவிடுவதே அதன் முதல் நடவடிக்கையாக இருக்கவேண்டும் என்று அது கருதுகின்றது. அதேவேளை, நாட்டை இரண்டு கூறாக ஆக்கிவைத்திருக்கும் விடயம் இனப்பிரச்சினையே அன்றி, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையோ பொதுத் தேர்தல் முறையோ அன்று.

எனவே, முதல் முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய விடயம் இனப்பிரச்சினைதான். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு மிக முந்தியது இனப்பிரச்சினை. 1972 ஆம் ஆண்டின் அரசமைப்பின் பிரதம மந்திரி முறையிலான ஆட்சியின் கீழ்தான் 1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழீழம் அமைப்பதற்கான ஆணையைக் கோரி இருந்தார்கள்.

அரசமைப்பில திருத்தம் கொண்டு வருவதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியினர் அவ்வாறு முக்கியத்துவம் கொடுத்து ஆலோசிக்கவேண்டிய விடயம் நாட்டில் சமஷ்டி முறையிலான ஆட்சிமுறையைக் கொண்டு வருவது பற்றியதாகவே இருக்கவேண்டும். சமஷ்டி அமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை இருக்கவேண்டும் என்பதையும் ஒரே சமயத்தில் தீர்மானித்துக் கொள்ளமுடியும். அரசமைப்பை மாற்றுவதென்பது நாட்டின் சட்ட இறைமையை மாற்றுவதாகும். அவ்வாறாயின் சகல இனக்குழுக்களினதும் பிரதிநிதிகள் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் பங்குபற்றுவது அவசியம்.

### மூன்று முக்கிய வாக்குறுதிகள்

தேர்தலின்போது ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணி மூன்று முக்கிய வாக்குறுதிகளை வழங்கியிருந்தது.

முதலாவது, புலிகளுடனான பேச்சுக்களில் ஒரு கடும்போக்கைக் கடைப்பிடிப்பது. இரண்டாவது, மக்களுக்கு மிக வேகமாகப் பொருளாதார விமோசனத்தை வழங்குவது. மூன்றாவது, அரசமைப்பில் மாற்றம் செய்வது.

இந்த வாக்குறுதிகளைப் புதிய அரசு மிக விரைவாக நிறைவேற்றத் தவறுமானால் அவர்களை நம்பி வாக்களித்து பதவியிலிருத்திய மக்களுக்கு அது பதில்சொல்லியாகவேண்டும். முதல் இரண்டு வாரகால செயற்பாடுகளைப் பார்க்கையில் அரசமைப்பை மாற்றி அமைப்பதுதான் அவர்களின் முதல்முக்கிய நோக்கமாகவிருக்கின்றது.

முதல் இருவாரங்களும் அரசின் செயற்பாடுகள் மிகக்கடினமானதாகவே இருந்துள்ளன.

அமைச்சர்கள் நியமனம், திணைக்கள ஒதுக்கீடுகள் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. தலைவர்களுக்கிடையில் இழுபறி நிலையே இருந்துவந்துள்ளது. இரண்டு சக்திமிக்க கட்சிகளுக்கிடையில் இவ்வாறான அதிகாரப்பகிர்வு தொடர்பான கடும் இழுபறி ஏற்படுவது ஒன்றும் ஆசசரியமல்ல. ஆனால், இருதரப்புமே பேரம் பேசுவதில் கடும்போக்கானவர்கள் என்பதாலேயே இழுபறி தொடர்ந்து கொணடிருக்கின்றது.

முன்னைய அரசு புலிகளுடனான பேச்சின்போது அதிகளவு விட்டுக் கொடுத்துவிட்டார்கள் என்பது இவர்களின் முக்கிய குற்றச்சாட்டாக இருந்துள்ளது. ஆனால், பிரச்சினைகளைத் தீர்க்க முனையும்போது கடும் போக்கைக் கடைப்பிடிப்பது எவ்வளவு சிக்கலான நிலைமைகளை உருவாக்குமஎன்பதுடன் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவாது என்பது இவர்களின் இழுபறியிலிருந்து தெரியவந்துள்ளது.

### சம்பள உயர்வும் வேலைவாய்ப்பும்

மக்களுக்கு பொருளாதார ரீதியில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே அரசின் அடுத்த பிரச்சினை.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 70வீதம் அதிகரிப்பது என்ற வாக்குறுதி அரசு முகங்கொடுக்க வேண்டிய அடுத்த சவாலாகும். 30ஆயிரம் தொழில்வாய்ப்பு ஏற்படுத்தியாகவேணடும் விவசாயிகளுக்கும் ஏனைய துறையினருக்கும் மானியங்கள் வழங்குவதும் ஏனைய முக்கிய பிரச்சினைகள் இவை. அனைத்தும் மூன்று மாத காலத்துக்குள் செய்து முடிக்கப்படுமஎன்பது வாக்குறுதி.

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கப்பால் உள்ள மக்கள் எதிர்நோக்குவது பொருளாதாரப் பிரச்சினையே என்பது பல ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தியே புதிய அரசு பதவிக்கு வந்தது. இப்பொழுது அதன் உண்மை நிலையை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதானால் பெருந்தொகையான நிதி ஆதாரங்கள் அரசுக்குத் தேவைப்படுகின்றது.

இதில் அரச ஊழியர்கள் சுமார் 10லட்சம் பேரின் சம்பளம் அதிகரிக்கப்படுவதனால் ஒரு வருடத்தில் மகாவலி அபிவிருத்திக்குச் செலவாகும் அளவு பணம் தேவைப்படும். சம்பள உயர்வு, விவசாய மானியம் முதலியவற்றை நிறைவேற்றுவதற்கு அரசு தனது வேறு செலவினங்களை வெட்டியாக வேண்டும் அல்லது வேறு எங்காவதிலிருந்து பணம் தேடியாகவேண்டும்.

அரச ஊழியர்கள் தற்பொழுது பெற்றுவரும் சம்பளம் அவர்கள் கௌரவமாக வாழ்வதற்குப் போதுமானவையாய் இல்லையென்று கூறப்படுகின்றது. அரச ஊழியர்களின் சம்பளம் பற்றி ஆராய்ந்த திஸ்ஸதேவேந்திரா ஆணைக்குழு, அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கும் அதே சமயம், அரசதுறைகளில் ஆள்குறைப்புக்களையும் மேற்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்திருந்தது. அவ்வாறு செய்திருந்தால் சம்பள உயர்வை வழங்குவது திறைசேரிக்குச் சாத்தியமாக இருந்திருக்கும். ஆனால், புதிய அரசே அரச ஊழியர்களின் சம்பளங்களை அதிக அளவில் அதிகரிப்பதுடன் அரசதுறை வேலைவாய்ப்புக்களையும் அதிகரிப்பதாக வாக்களித்திருக்கின்றது.

ஆக, இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற எவ்வாறு நிதி ஆதாரங்களை அரசு தேடிக்கொள்ளப் போகிறது என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி. திறைசேரியில் போதியளவு பணம் இல்லை. எனவே, அரசு உள்ளூரில் அல்லது சர்வதேச மட்டத்தில் கடன்களைப்பெற முயற்சி செய்யக்கூடும் என்று கருதப்படுகின்றது. புதிய நிதி அமைச்சர் பேரம் பேசுவதில் கடும்போக்கு இருக்க வேண்டுமென்பதில் கண்டிப்பானவர் என்று கருதப்படும் நிலையில், அரச ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிப்பதில் அதிக பணம் செலவிடப்படுவது சரியான பொருளாதாரந்தானா என்பதைச் சர்வதேச நிறுவனங்களுக்கு எவ்வாறு விளங்கவைத்து நிதி ஆதாரங்களைப் பெற்றுக்கொள்வார் என்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டும்.

**ஜெஹான் பெரேரா**
*(தேசிய சமாதான சபை)*

### மூன்றில் இரண்டு பெரும்பான்மை

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் புதிய அரசு உண்மையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றிருப்பதாக ஊடகங்கள் மூலமாக இப்பொழுது பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதன் மூலம் அரசமைப்பைத்திருத்துவதற்கு ஆணை வழங்கப்பட்டுவிட்டதாகவும் பேசப்படுகின்றது. இதற்குக் கூறப்படும் நியாயம் என்னவென்றால் 1978ஆம் ஆண்டு கைவிடப்பட்ட அரசமைப்பின் கீழ் அதிகவாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றிபெற்றதாக அறிவிக்கும் முறையின்படி 160தேர்தல் பிரிவுகளில் 106பிரிவுகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றிருக்கும் என்பதாகும். மேலும் 22தேர்தல் மாவட்டங்களில் பதின்னான்கை இக்கூட்டணிவென்றதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த வாதத்துக்குமுன் வைக்கப்படும் இரண்டு இலக்கங்களும் மூன்றில் இரண்டு என்ற எண்ணிக்கையைக் காட்டவில்லையென்பது ஒரு புறமிருக்க, இது மூன்றில் இரண்டு பங்கு என்பதற்கு சமமான எண்ணிக்கை என்றும் வாதிடப்படுகின்றது. இவ்வாறு பார்ப்பதானால் முந்திய அரசு 160தேர்தல் பிரிவுகளில் 110இல் வெற்றி பெற்றதாகவும், 22தேர்தல் தொகுதிகளில் 17இல் வெற்றி பெற்றிருந்ததாகவும் கணித்திருக்கலாம். அதை வைத்துக்கொண்டு தனக்கு மூன்றில் இரண்டு பங்கு வெற்றி கிடைத்துவிட்டதாகப் பிரசாரம் செய்யவோ ஜனாதிபதி மீது குற்றப்பத்திரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவோ முன்னைய அரசு முற்படவில்லை.

அரசமைப்பை மாற்றி அமைப்பதற்கு நாடாளுமன்றில் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றிருக்கவேண்டும் என்பதே நியதி. நடந்து



முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி 46வீதம் வாக்குகளைப் பெற்றது. நாடாளுமன்றில் 225ஆசனங்களில் 105ஆசனங்களை வென்றது. அதற்கு மூன்றில் இரண்டு பங்குமட்டுமல்ல சாதாரண பெரும்பான்மைகூடக் கிடைக்கவில்லை.

மூன்றில் இரண்டு பெறுவதென்பது கஷ்டந்தான். ஆனால், சாத்தியமற்றதன்று. சுதந்திர ஆணைக் குழுக்களை உருவாக்குவதற்கான 17ஆம் அரசமைப்புத் திருத்தமானது எவ்வாறு ஒருமித்த கருத்துடன் நிறைவேற்றப்பட்டதென்பது ஒரு நல்ல உதாரணமாகும்.

### கட்சிமனப்பான்மை

அரசமைப்பைத் திருத்தும், இந்த அரசின் முயற்சிகளால் ஒரு தலைப்பட்சமாகக் கட்சி மனப்பான்மை பெரிதாக வெளிப்பட்டுவருகின்றது. முழு நாட்டுக்கும் நன்மை ஏற்படுத்துவதைவிட கூட்டமைப்பின் நலன்களையே முன்னெடுப்பதாக அது காணப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி பதவியில் இரண்டாம் தவணையைப் பூர்த்திசெய்யும் நிலையில் இருக்கின்றார். அதனால் ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் அவர் போட்டியிடமுடியாது. ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்குத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதற்கு இதுவே முக்கிய காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாடாளுமன்றில் இருக்கும் கட்சிகளில் எதுவும் (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைத் தவிர) தற்போது அரசமைப்பை மாற்றி அமைப்பது பற்றி அக்கறை காட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை.

**(தமிழில் : நந்தன்)**

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதா? அரசமைப்பில் திருத்தம் செய்வதா?



அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப பிரதிநிதி சொமியா அலோக்சிமும் படத்தில் உள்ளார். (ஓ-10)

# பிறவிப் பெரு நோயை நீக்கிடும் அருமருந்து

ஒவ்வொரு சமயத்திற்கும் சமயக் குறியீடுகள் உள்ளன. இவை அருவமாகவுள்ள கடவுளை அறிவுறுத்தி உணர்த்துவன. சைவசமயிகளுக்குரிய சமயச் சின்னங்களாக தேனினும் இனிய திவ்ய மருந்து விபூதியும், உருத்திராக்கமும் விளங்குகின்றன. யாகங்கள் செய்கின்றபோது ஸ்மார்த்தர்களும் மத்வர்களும் ஹோமத்திலிருந்து எடுக்கப்பட்ட பஸ்மத்தை அணிகின்றனர். வீபூதியைக் குழைத்துத் திரிபுண்டரமாக இட்டுக் கொள்வதற்கு வேதங்களிலே மந்திரங்கள் உரியவாறு கூறப்பட்டுள்ளன. இவ்விதம் நோக்கும்போது விபூதி வேத சம்பந்தமுடையூது எனக்கொள்ளப் படுகின்றது.

*சிவஞானச் செல்வர்.*
*சி.சி. வரதராசா*

"ஸ்ரீகரம்ச பவித்திரம் சரோக நிவாரணம் ணேகே வசீகரம் புண்யம் பஸ்மத்தைலோக்ய சாதனம்"

மிகத் தூய்மையானதும் மங்களத்தைச் செய்யக்கூடியதும் நோய்களையும் துக்கங்களையும் போக்கக் கூடியதும் மேலானதும் மூவுலகத்திற்கும் சாதனமானதும் எல்லா உலகங்களையும் வசீகரிக்கக் கூடியதுமான தேனினும் இனிய திவ்ய மருந்து விபூதி என விபூதியின் பெருமையை மேற்குறிப்பிட்ட சுலோகம் விளக்குகிறது.

திருந்து, பசிதம், பஸ்மம், சாரம், இரக்ஷை எனப் பல பெயர்கள் கொண்டு விபூதி குறிப்பிடப்படுகிறது. விபூதி, கற்பம், அனுகற்பம், உபகற்பம் அகற்பம் என நால்வகைப்படும். விபூதி தரிக்கும் முறையானது உத்



தூளனம், திரிபுண்டரம் என இரு வகைப்படும். வலது கை நடு மூன்று விரல்களால் பூசும் முக்குறிகள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கி ஞானம் பெறுவதைக் குறிப்பிடுவதாகும்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் சிவஞான நெருப்பாற் சுட்டெரித்துப் புனித நிலையை ஆன்மா அடைவதே மானிட வாழ்க்கையின் பெரும் பயன் என்பதனை இது நினைவூட்டுகின்றது.

பாரம்பரிய சிவபூமியில் வாழுகின்ற புனிதமான சைவப்பெருமக்களுக்குத் திருநீறு, உருத்திராட்சம், ஐந்தெழுத்து ஆகிய மூன்றும் அதி முக்கியம் வாய்ந்தமை. இந்த மூன்றில் முந்தி நிற்பது திருநீறு என உணர்க, திருநீற்றை ஒருவருக்குத் தரும் போதும், நாம் உள்ளன்போடு திருநீற்றைப் பூசிக்கொள்ளும் போதும் சிவபெருமானுடைய ஐந்தெழுத்து மந்

**ஞானக்கதிர்**

திரத்தை அன்புடன் ஓதுதல் வேண்டும். இந்தக் காரணத்தினால் திருநீற்றுக்குப் பஞ்சாட்சரம் என்ற ஒரு பெயரும் அமைந்தது.

குழந்தையின் நோய்க்குத் தாய் மருந்துண்பது போல், மலைபோல் குவிந்து கிடக்கும் நம் வினைகளை நாம் அணியும் திருநீறு மட்டும் பொடியாக்கப் போதாது என்று சிவபிரான் நம்மீது கொண்ட பெருங்கருணையினால் திருநீற்றைத் தம் உடலெங்கும் பூசுகிறார் எனச் சிவபிரானின் பெருங்கருணைத்திறன் இயம்பப்படுகின்றது.

இவ்விதம் எல்லாச்சிறப்புக்களும் பொருந்திய ஒளிமயமான இலட்சுமி கடாட்ச மங்களகரமான விபூதியைச் சைவசமயத்தவர்களாகிய நாம் அணிந்து உள்ளன்போடு புனிதமான சமய வாழ்வினைக் கைக்கொண்டு மேன்மையடைவோமாக.

*'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'*

# பிரம்புக் கைப்பணிப் பயிற்சிநெறி

பிரம்புப்பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடும் கைப்பணியாளருக்கான ஒரு வாரப் பயிற்சிநெறி ஒன்று அடுத்த மாதம்கொழும்பு தேசிய வடிவமைப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிநெறிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 5 கைப்பணியாளர்களை அனுப்புவதற்கு யாழ். மாவட்டத் தொழிற்றுறைத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பிரம்புப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடும் கைப்பணியாளர்கள் தமது பெயர் விவரங்களை யாழ். செயலகத்தில் இயங்கும் மாவட்டத் தொழிற்றுறைத் திணைக்களத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளுமாறு தொழிற்றுறைத் திணைக்கள அதிகாரி பி.ராகவன் கேட்டுள்ளார். (ஒ-5)


## ராஜ் லங்கா ரூர்ஸ்

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

வெளிநாட்டில் உடனடி வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதில்
வெற்றி நடைபோடும் ராஜ் லங்கா ரூர்ஸ் நிறுவனத்தின்
அதிரடி சிறப்புச்செய்தி
டோகா நாட்டிற்கு மருத்துவமனை பணியாளர்
(HOSPITAL CLEENER)
உடனடியாகத் தேவை ~ நேரடி வேலைவாய்ப்பு
இதற்கான நேர்முகப்பரீட்சை
ஏப்ரல் 23, 24 இன்றும், நாளையும் முற்பகல் 10 மணிமுதல் மாலை 5 மணி வரை யாழ். நகர அலுவலகத்தில் நடைபெறும்.

முக்கிய குறிப்பு: மேற்படி வேலைவாய்ப்பிற்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளும் முதல் 25 அதிர்ஷ்டசாலிகளுக்கு கொழும்பு செல்லும் பிரயாண ஒழுங்குகள் இலவசம்.

உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ராஜ் லங்கா ரூர்ஸ்
220A, 2 ஆம் குறுக்குத் தெரு,
(ஆஸ்பத்திரி வீதி வழியாக) யாழ்ப்பாணம்.
C/34601)(34-18-19)



## பழைய பத்திரிகைகள் விற்பனை

பொதிகள் கட்டுவதற்கு உகந்த பழைய பத்திரிகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொகையாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. தேவைப்படுவோர் நேரில் வருகைதந்து விவரங்களை அறிந்துகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
'உதயன்' பணிமனை,
(C/34548)(34-18-19) 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## பாலம் சேதம்!

கொழும்புத்துறை, இலந்தைக் குளம் வீதியிலுள்ள பாலம் உடைந்து பெரும் குழியாகக்காணப்படுகிறது.

இதனால், இவ்வீதி வழியாகப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பல சிரமங்களையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-30)

## நூலகக் கட்டடத் திறப்புவிழா

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 25 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகம், நூலகமூலவள நிலையம், தகவல் தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றைக் கொண்ட கட்டடத் திறப்புவிழா நாளைமறுதினம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அதிபர் இ.நடராசா தலைமையில் நடைபெறும்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் இக்கட்டடத்தை திறந்துவைப்பார். (-8-173)

## திருட்டு!

பாண்டியன்தாழ்வுப் பகுதியில் உள்ள வீடொன்றில் பகல்வேளையில் பல லட்சம்ரூபா பெறுமதியுள்ள தங்க நகைகள் திருட்டுப்போயுள்ளன.

காலை 10 மணியளவில் வீட்டின் உரிமையாளர் அருகில் உள்ள கடைக்குச் சென்றிருந்தபோதே திருட்டு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-30-51)

## பாம்பினால் கடியுண்ட மூவர் ஆஸ்பத்திரியில்!

தென்மராட்சி,ஏப்.23

வெவ்வேறு இடங்களில் பாம்பினால் கடியுண்ட மூவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 19 ஆம்திகதி இரவு இடம்பெற்ற இச்சம்பவங்களில் சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த சிவஞானம் ரமீஸா (வயது 17), மிருசுவில் வடக்கைச் சேர்ந்த விவேகானந்தன் மனோகரன் (வயது 21), அல்லாரை தெற்கைச் சேர்ந்த சின்னராசா நவபாலன் (வயது44) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (8-117)

## நான்காவது பிறந்தநாள் வாழ்த்து

23.04.2004

HAPPY BIRTHDAY



ஜேர்மனியில் வசிக்கும்
கேதீஸ்வரன் - மதிவதனியின்
செல்வப் புதல்வன்

### கஜானன்

இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை தனது நான்காவது பிறந்தநாளை ஜேர்மனியில் உள்ள தமது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை தொட்டிலடி, சங்கானையில் வசிக்கும் அன்பு அம்மப்பா, அம்மம்மா, லண்டனில் வசிக்கும் சங்கர் மாமா, ஜேர்மனியில் வசிக்கும் மதி அன்ரி, சதிஸ் சித்தப்பா, கனடாவில் வசிக்கும் வவா சித்தப்பா, செல்லா சித்தி ஆகியோர் சீரணி நாகபூஷணி அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

K.தங்கராஜா (அம்மப்பா).
தொட்டிலடி, சங்கானை. (31156)(34-14-18)


## இன்டநெட் பிரியர்களுக்கான


sltnet PREPAID CARD




மற்றும்
அனைத்துத் தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

S.M.S
CARD SALES CENTRE
ஆஸ்பத்திரி வீதி,
பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.
(சி-34598)(34-19-18)


# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்
இல.05, ராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும்
இல.182, பிரதான வீதி, கெக்கிராவ றோயல் சலூன்
உரிமையாளருமாகிய

## சூசைமுத்து அன்ரனி


அவர்கள் கடந்த 18.04.2004 கெக்கிராவயில் காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்கோர் அணிகலனாய் ஆதரவு காட்டி
பண்புக்கோர் இருப்பிடமாய் பாசம் காட்டி
ஒளிதரும் மெழுகுவர்த்தி தான் தேய்ந்து உருகுவது போல
நெஞ்சினிலே பாரமேற்றி நாளாந்தம் உடலுருகி
இறுதியில் எம்மை விட்டு எங்களின் இதயம் விட்டு
எங்கு பெரியப்பா சென்றீர்கள்? எப்படித் தாங்கிடுவோம்?
உங்களின் நினைவு எம்மைத்தொடுகின்ற நேரமெல்லாம்
உங்களின் படம் தான் எம்மை ஆறுதல்படுத்தும்
எங்களின் இதயமாகி எம்மோடு வாழ்ந்த நீங்கள்
உங்களை நாம் மறவாத வரமொன்று தந்திடுங்கள்.

மரியதாஸ் டைசன் (சகோதரன் - பிரான்ஸ்)
டைசன் திலகா (மச்சாள் - பிரான்ஸ்)
சின்னப்பு செல்லம் (மாமி - பிரான்ஸ்)
அப்பு - வசந்தி குடும்பம் (கனடா)
சங்கர் - சுமி குடும்பம் (கனடா)

தகவல்:
ஜனா, நிஷா, வினோ
(பெறாமக்கள் - பிரான்ஸ்)
(31156)(22-18-19-34)

# செய்யும் தொழிலைச் சிறப்புடனும் தரத்துடனும் செய்வது முக்கியமானது!



ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமர விக்ரமவும் 113 கம்பனி களைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேச மான்ய லலித்கொத்தலாவலை தொழில் அதிபர் ஜயரத்னவை செவ்வி காண்கிறார்கள். வங்கி அதிகாரி, மொழி பெயர்ப்பாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர நிகழ்ச்சியில் தொழிலதிபர் ஜே.எல்.டபிள்யூ.ஜயரத்ன கடந்த 20ஆம் திகதி தோன்றி தனது தொழில்முன்னேற்றம் பற்றி விவரித்தார்.

செய்யும் தொழிலைச் சிறப்புடனும், தரத்துடனும் செய்தால் வாழ்வில் முன்னேறலாம் என்று இரத்தினக்கல் பட்டைதீட்டும் தொழிலில் வெற்றிகண்ட ஜயரத்ன ஜேம்ஸ் பிரைவேட் லிமிட்டட் உரிமையாளரான ஜயரத்ன விளக்கம் தந்தார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் ஜயரத்னவை செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* உங்களைப்பற்றி எமக்கு விளக்க முடியுமா?

*பதில்:* நான் மொறட்டுவையில் வசிக்கிறேன். எனது தகப்பனார் சிறு பிராயத்திலேயே இறந்துவிட்டார். எனது தந்தையின் மரணம் காரணமாகத் தொடர்ந்து என்னால் படிக்கமுடியாமல் போய்விட்டது. ஆகவே, மிகவும் கஷ்டப்பட்டேன் சிறுவயதிலேயே சொல லொணாத் துயரத்தில் வாழ்ந்தேன்.

பின்னர் மாணிக்கக் கற்கள் பட்டை தீட்டும் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தேன். சுமார் 10 வருடங்கள் அங்கு வேலைசெய்தேன்.

ஒருகட்டத்தில் நான் தனியாகப் பட்டை தீட்டும் பட்டறை ஒன்றை ஏன் ஆரம்பிக்கக்கூடாது என்ற எண்ணம் உருவானது.

மூவாயிரம் ரூபா கொடுத்து சிறிய இயந்திரமொன்றை வாங்கி நான் தனியாக அந்தத் தொழிலை ஆரம்பித்தேன்.

சிறிதுகாலத்தில் இன்னொரு இயந்திரம் வாங்கினேன். அதன்முன்னேற்றம் என்னை இந்த அளவுக்குக் கொண்டுவந்துள்ளது.

இத்துறையில் சுமார் 20 வருடங்களாக ஈடுபட்டு வருகிறேன்.

*கேள்வி:* இந்த நீண்டகால அனுபவம் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* ஆரம்பத்தில் ஓர் இயந்திரத்துடன் எனது தொழிலை ஆரம்பித்த நான் இன்று ஐம்பது இயந்திரங்களை வைத்து ஓயவில்லாமல் தொழில்புரிகிறேன். இப்படியொரு நிலைக்கு நான் வந்தமைக்கு காரணம் எனது தொழிலைச் சிறப்பாகவும் தரத்துடனும் செய்யவேண்டும என்ற ஒரே நோக்கத்தில் நான் செயற்பட்டு வருவதால் தான்.

இந்தத்துறையில் சாதாரண பட்டை தீட்டும் தொழிலாளியாக தொழிலை ஆரம்பித்த காரணத்தால் இதிலுள்ள நெளிவுசுழிவுகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறேன். தொழில் ரீதியாகத் தரமான மாணிக்கக் கற்களை உருவாக்கி அவற்றை விற்பனை செய்வதற்கு முதற்காரணமே அவற்றை பட்டைதீட்டி அழகுபடுத்துவதிலேயே தங்கியுள்ளது.

உலகநாடுகளில் பட்டைதீட்டி சந்தைக்கு வரும் மாணிக்கக் கற்களுக்கு ஈடாக எனது பட்டறையில் தீட்டப்படும் கற்கள் போட்டி போடும் அளவுக்குத் தரமானவையாகும். கடந்த வருடம் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த மாணிக்கக் கற்கள் கண்காட்சியில் எனது பட்டறையில் தீட்டப்பட்ட கற்கள் பெரும் சந்தை வாய்ப்பைப்பெற்றன.

இலங்கையில் ஏற்றுமதி செய்யப்படும் "வெள்ளை டொப்பாஸ்" மாணிகக் கற்கள் உற்பத்தியில் பலர் ஈடுபட்டிருந்தனர். பலர் ஈடுபட்டிருந்தபோதும் மொத்த உற்பத்தியில் 10 வீதமே ஏற்றுமதி செய்யப்பட்டது. இன்று நான் மட்டும் மொத்த ஏற்றுமதியில் 80 வீதம் ஏற்றுமதி செய்கிறேன். என்னிடம் 3,500 பேர் தொழிபுரிகின்றனர். "வெள்ளை டொப்பாஸ்" மாணிக்கக் கற்கள் ஏற்றுமதித் துறைக்கான 2003 ஆம் ஆண்டு வெள்ளிவிருதைப் பெற்றுள்ளேன்.

*கேள்வி:* இந்த முன்னேற்றத்துக்கு நிதியுதவிகள் எப்படிக் கிடைத்தன?

*பதில்:* செலான் வங்கி எனக்கு முதன்முறையாக 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கியது. இதன்மூலம் பலமுன்னேற்றங்களை அடைந்துள்ளேன். இன்று சுவிஸ், சுவீடன் போன்ற நாடுகளில் மட்டுமே வெள்ளைக் கற்களை நீலநிறமாக்கும் தொழில்நுட்பம் உள்ளது. அதே தொழில்நுட்பம் எம்மிடமும் உள்ளது. இதுதொடர்பாக பல பயிற்சிகளை நான் பெற்றுள்ளேன.

கல்லை நீலநிறமாக மாற்றுவதற்கு சுமார் இரண்டு வருடங்களாகும். விரைவில் இந்த முயற்சியில் இறங்கத் தீர்மானித்துள்ளேன்.

எனது முன்னேற்றத்துக்கும், எனக்கு ஆலோசனை வழங்குவதிலும் எனது மனைவி முதன்மையானவர். கற்களை வடிவமைப்பதற்கு சகல ஆலோசனை வழங்கும் தொழில்நுட்பவியலாளராகவும் அவரே செயற்படுகின்றார்.

- இவ்வாறு கூறினார் ஜயரத்ன.

## அத்துளு குளத்தைப் புனரமைக்கும்படி வடிகாலமைப்புச் சபை கோரிக்கை

கொக்குவில்,ஏப்.23

கரவெட்டி நீர் விநியோகத்திட்டத்திற்கு அருகில் உள்ள அத்துளு குளம் பகுதி பொதுமக்களால் பெருமளவில் அசுத்தப்படுத்தப்படுவதாகவும் -

இதனால் அப்பகுதியில் உள்ள கிணறு மாசுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் -

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக பிராந்திய முகாமையாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கரவெட்டி நீர் விநியோகத்திட்டத்திற்கு அருகில் உள்ள அத்துளு குளம் பகுதி பொதுமக்களால் மிக மோசமான வகையில் அசுத்தப்படுத்தப்படுகிறது. அப்பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் பராமரிக்கப்படும் கிணறு ஒன்று உள்ளது. அப்பகுதி அசுத்தமாக்கப்படுவதால் கிணற்று நீர்மாசடைகிறது.

எனவே, அக்குளத்தைச் சுற்றி வேலி அமைத்து மக்கள் நடமாட்டம் இல்லாமல் செய்யவேண்டும். அத்துடன், குளத்தை ஆழமாக்கிக் கொள்ளளவை அதிகமாக்கினால் மழைநீர் சேகரிக்கக் கூடியதாக இருக்கும் இதன்மூலம் வெப்ப காலங்களில் கிணற்றில் நீர் வற்றுவதைத் தடுக்கமுடியும். ஆகவே, இக்குளத்தைப் புனரமைக்க ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்று அதில் உள்ளது.

(ஓ-10-76)

## பொலீஸ் திணைக்களத்தில் பணிபுரிவோருக்கு அரசியல் ரீதியான இடமாற்றம், பதவியுயர்வு இல்லை

### பொலீஸ் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிக்கிறார்

கொழும்பு,ஏப்.23

பொலீஸ் திணைக்களத்தில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கு அரசியல் ரீதியாக இடமாற்றமோ, பதவி உயர்வோ வழங்கப்படமாட்டாது என பொலீஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார்.

பொலீஸ் தேசிய ஆணைக்குழுவின் மத்திய வலய அலுவலகத்தை கடந்த 19ஆம் திகதி கண்டியில் திறநது வைத்து உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில தெரிவித்ததாவது:-

நேர்மையாகவும், பக்க சார்பின்றியும் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும்.

பல வருடங்களுக்கு முன் சீர்குலைந்து காணப்பட்ட பொலீஸ் திணைகளம் தற்போது திருப்திகரமான நிலைக்கு மாற்றமடைந்துள்ளது.

சந்தேக நபர்களை விசாரணை செய்யும்போது சில பொலீஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கை திருப்தியற்ற நிலையில் இருக்கின்றது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை ஆகிய மாவட்டங்கள் உட்பட பொலீஸ் நிலையங்கள் தொடர்பான முறைப்பாடுகள் இந்தச் செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பிரதேச பொலீஸ் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் இந்தச் செயலகம் மூலம் தீர்வு காணப்படும் என்றார் அவர்.

(ஓ)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர்கள் தடுத்துவைப்பு

வரணி,ஏப்.23

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிராக்டர்கள் கொடிகாமம் பொலீஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. வரணிப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த இரண்டு டிராக்டர்களை கொடிகாமம் பொலீஸார் வரணி உபதபாலக சந்திக்கருகில் வைத்துக் கைப்பற்றினார்கள். (8-170)

## வடமேற்குக் கடற்படுக்கையில் எண்ணெய் வளம் பற்றி ஆராய இலங்கைக்கு ரஷ்யா உதவும்

கொழும்பு,ஏப்.23

இலங்கையின் வடமேற்குக் கடற படுக்கையில் எண்ணெய் வளம் உள்ளதா என்று ஆராய்வதற்கு இலங்கைக்கு உதவ ரஷ்யா முன்வந்துள்ளது.

இது விடயத்தில் சீரான திட்டம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கத் தமது நாடு தயாராக இருப்பதாக இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் மிக்காய்ல் கார்போவ் கூறியுள்ளார். மின் சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நேற்றுமுன்தினம் சந்தித்தார் ரஷ்யத் தூதுவர். அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

1970 ஆம் ஆண்டில் ரஷ்யா இதே மாதிரியான ஆய்வு முயற்சியை இலங்கையில் மேற்கொண்டிருந்தது. ஆனால், அது முழுப் பயனைத்தரவில்லை. இந்த விடயத்தில் மீண்டும் ஒருமுறை தனது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு ரஷ்யா முன்வந்துள்ளது.

மின்சக்தி அமைச்சருடனான இந்தச் சந்திப்பில் இலங்கையின் மின்சார நெருககடி பற்றியும் கலந்துரையாடப்பட்டது சிறிய அனல் மின் நிலையங்களை அமைப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளது என்று ரஷ்யத்தூதர் தெரிவித்தார். (எ-க)

## வீதிப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வரணி,ஏப்.23

சாவகச்சேரி பிரதேச சபை இவ்வாண்டு இரண்டு வீதிகளை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வரணி மகாவித்தியாலய வீதி, மந்துவில் கேருவளை வீதி ஆகியவையே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட உள்ளன. (8-170)

## வலி.தெற்கு ஓய்வூதியருக்கு

வலிகாமம்தெற்கு,ஏப்.23

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவினூடாக ஓய்வூதியம் பெறுபவர்கள், ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் சிரமங்களை நீக்கும் பொருட்டு தமது ஓய்வூதியம் பற்றிய தரவுகள் அடங்கிய படிவத்தை மே மாதம் முதலாம் திகதிக்குமுன் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் க.திருவாகரன் அறிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுபவர்களின் சுயவிவரம் கோரும் படிவங்கள் பிரதேச செயலகத்தால் ஓய்வூதியர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் உரிய திகதியில் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் சிரமங்களை நீக்குவதற்கும், இவ்வாறான சுயவிவரம் கோரும்படிவங்கள் ஓய்வூதியர்களால் பூர்த்தி செய்து வழங்கப்படுவது அவசியம் என்றும் -

மே மாதம் முதலாம் திகதிக்கு முன் இப்படிவம் ஒப்படைக்கப்படாதுவிடின் ஓய்வூதியர்களுக்கு மே மாத ஓய்வூதியப் பற்றுச்சீட்டினை வழங்குதல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும் எனவும்

- பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

ஓய்வூதியர்கள் தமது சுயவிவரம் கோரும் படிவத்தைத் தத்தம் பகுதி கிராம சேவையாளர் மூலம் உறுதிப்படுத்தி, கிராம சேவையாளர்கள் மூலமோ, நேரடியாகவோ பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

(ஓ-172)

## கோழி வகைகளை இலவசமாக விநியோகிக்க நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,ஏப்.23

கினிக்கோழி, வான்கோழி, காடைக் கோழி, பன்றம் கோழி போன்றவற்றை வளர்க்க விரும்புபவர்களுக்கு அவற்றை கால்நடை வைத்தியர் பிரிவுகள் மூலம் இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றை வளர்க்க விரும்புகிறவர்கள் தமது பெயர்களையும் கோழி இனங்களையும் பெறவிரும்பும் எண்ணிக்கையையும் பதிவுசெய்து கொள்ளுமாறு சுன்னாகத்தில் உள்ள வலிகாமம் தெற்கு பிரதேச கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

மேற்படி இனங்களைச் சேர்ந்த கோழிக்குஞ்சுகள் கிடைக்கப்பெற்றதும் பதிவுசெய்துள்ளவர்களுக்கு அவை பகிர்ந்து அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-152)

# திருவருள்மிகு கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில்



## முதலாய கோயில்கள், கைதடி

## பிள்ளையார் துவஜா ரோஹண

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

இறையன்புடையீர்!

சீருஞ்சிறப்புமிக்க கைதடி ஊரின் கிழ்பால் சகலான்மாக்களையும் உய்விக்கும் பெருங்கருணையால் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் பரம்பொருளாம் வீரகத்திப் பிள்ளையாருக்குத் துவஜா ரோஹண மஹோற்சவம் மங்கள கருமம் நிகழத் திருவருள் கூடியுள்ளது. மங்களகரமான தாரண வருஷம் சித்திரை மாதம் 11ஆம் நாள் (23.04.2004) வெள்ளிக்கிழமை பகல் 12.15 மணி அளவில் (துவஜா ரோஹணம்), கொடியேற்றம் நடைபெற்றுப் பன்னிரண்டு நாள்களும், இருகாலங்களிலும் திருவிழா நடைபெறும். இந்நாள்களில் அடியார்கள் ஆசாரசீலராக விரதமனுஷ்டித்து சுவாமி தரிசனம் செய்து திருவருள் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### மஹோற்சவ காலக் கிரியை நேரங்கள்

தாரண வருஷம் 10ஆம் நாள் (22.04.2004) வியாழக்கிழமை காலை 8.00 மணிளவில் மஹாகணபதி ஓமம், அபிஷேகம், விசேஷ பூஜைகள் நடைபெற்று, விநாயகப் பெருமான் திருவுலாக் காட்சி மாலை மஹோற்சவ பூர்வாங்கக் கிரியைகள் நடைபெறும்.

23.04.2004 இன்று வெள்ளிக்கிழமை 8.00 மணி அபிஷேக ஆரம்பம், காலை சந்தி பூஜை, 9.30 மணி வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சகல உபசாரங்களுடன் துவஜ ஸ்தம்ப மண்டபத்துக்கு எழுந்தருளி துவஜா ரோஹணம் (கொடியேற்றம்) நடைபெற்று பெருமான் வீதி வலம் வந்து யதாஸ்தானம் சேருவர். பி.ப. 4.30 மணிக்கு மேல் சதுர்த்தி அபிஷேகம், பூஜைகள், மஹா யாகாரம்பம், துவஜஸ்தம்பபூஜை, சுவாமி எழுந்தருளல் நவஸந்தி ஆவாஹனம் இரவு உற்சவப் பூர்த்தி.

01.05.2004 சனிக்கிழமை இரவு 9.00 மணியளவில் வேட்டைத் திருவிழா நடைபெறும்.

02.05.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணியளவில் சப்பரத்திருவிழா நடைபெறும்.

03.05.2004 திங்கட்கிழமை காலை ரதோற்சவம் (தேர்த்திருவிழா) காலை 9.00 மணியளவில் ரதா ரோஹணம் திருத்தேரில் விநாயப்பெருமான் எழுந்தருளி வீதி வரும் காட்சியைத் தொடர்ந்து பக்தர்கள் அர்ச்சனைகள் நடைபெறும்.

04.05.2004 செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் காலை 10.00 மணியளவில் தீர்த்தவாரி நடைபெறும். தீர்த்த மண்டபத்தில் விஷேச பூஜைகள் நடைபெற்று விநாயகப்பெருமான் யதாஸ்தானம் சேர்ந்து மஹாயாக கும்பாபிஷேகம் நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கப் பெறும்.

05.05.2004 புதன்கிழமை மஹோற்சவப் பிராயச்சித்த அபிஷேகம், விஷேட பூஜைகள் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வந்து காட்சியளிப்பார். தொடர்ந்து வைரவர் மண்டபப்படி விசேஷ பூஜை அருட்பிரசாதம் வழங்கல்.

### மஹோற்சவ கால பூஜை நேரங்கள்

| காலைப் பூஜை நேரங்கள் | | மாலைப் பூஜை நேரங்கள் | |
|---|---|---|---|
| உஷக்காலம் | 6.30 | சாயரட்சை | 4.30 |
| அபிஷேக ஆரம்பம் | 8.00 | இரண்டாங்காலம் | 6.00 |
| காலை சந்தி பூஜை | 9.30 | வசந்தமண்டபப் பூஜை | 6.30 |
| வசந்தமண்டபப் பூஜை | 10.00 | துவஜஸ்தம்ப பூஜை | 6.45 |
| துவஜஸ்தம்பப் பூஜை | 10.30 | ஸ்வாமி திருவீதி உலாக்காட்சி | |
| பகல் திருவுலா நடைபெறும் | | அர்த்தயாமப் பூஜை | 10.00 |
| உச்சிக்காலப் பூஜை | 12.30 | | |

**மஹோற்சவ காலங்கள் பன்னிரண்டு நாள்களும் இரவு 7.15 மணி தொடக்கம் 8.15 மணிவரை சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.**

**கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் - பரிபாலன சபை - கைதடி. 11.04.2004**

விளம்பர அன்பளிப்பு:

**கனகா பத்திரிகை விற்பனையகம்**

இல. 06, பலாலி வீதி,
நவீன சந்தை, திருநெல்வேலி.

(சி-34602) (24-18-19)

# மூக்குக்கண்ணாடி விநியோகம்

தென்மராட்சி,ஏப்.23

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த 45 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கினர்.

கழகத்தினால் கடந்த மாதம் அப பிரதேச மக்களுக்கு நடத்திய இலவச பரிசோதனை முகாமில் கண் பரிசோதனை மேற்கொண்டவர்களில் கண பார்வையில் பாதிப்பு ஏற்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 45பேருக்கே மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.(ஓ-117)

# கண்ணீர் அஞ்சலி



வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணப் பிரிவில் குமுதினிப்படகுச் சேவையில் கடமையாற்றி, 19.04.2004இல் பிரிவுற்ற

## சிவசுப்பிரமணியம் செல்வலிங்கம்

அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.**

(31170) (24-18-19)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 - 07 - 1938



உதிர்வு 27 - 04 - 2001

திருமதி

## சபாரத்தினம் இராசாத்தியம்மா

திதி: சதுர்த்தி 23.04.2004

*அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே*
*எங்கள் வாழ்வின் வழிகாட்டியே!*
*தந்தையாய் தெய்வமாய் அரவணைத்து*
*உங்கள் நலன் பாராமல் நாங்கள் சீரும்*
*சிறப்புடன் வாழவழி வகுத்த அன்புத் தாயே!*
*நீங்கள் எம்மைப் பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும்*
*உங்கள் அன்புமுகமும் பசுமையான நினைவுகளும்*
*எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது.*

*65, கச்சேரி - நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(31171) (24-18-19)

# கண்ணீர்க் காணிக்கை



## அமரர்

# சி.கே.கந்தசாமி

*(முன்னாள் அதிபர்,*
*யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)*

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த எமது முன்னாள் அதிபர் **அமரர் சி.கே.கந்தசாமி** அவர்களின் மறைவை நினைந்து நெஞ்சுருகி அஞ்சலிக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பழைய மாணவர்கள், பெற்றோர்.**

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(சி-34606) (24-18-19)

# தமிழ்ச் சிறுகதை இலக்கியங்கள் ஈழத்திலேயே முதலில் வெளிவந்தன!

## சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டுவிழாவில் செங்கை ஆழியான் உரை

வடமராட்சி,ஏப்.23

தமிழ்ச் சிறுகதை இலககியம் முதன்முதலில் 1895ஆம் ஆண்டில் ஈழத்திலிருந்து வெளியான 'உதயதாரகை' பத்திரிகையில் வெளிவந்தது. அதன் பினனர் 1915ஆம் ஆண்டில்தான் இந்தியாவில் தமிழ் சிறுகதை இலக்கியம் வெளிவந்தது.

இவ்வாறு தெரிவித்தார் மூத்த எழுத்தாளர் க.குணராசா (செங்கை ஆழியான்).

புலோலியூர் க.தம்பையா எழுதிய 'ஐம்பதிலும் ஆசைவரும்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நல்லை ஆதன மண்டபத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் சீமாட்டி நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் இலக்கியத்திற்கு புலோலியூர் தகுந்த படைப்பாளிகளைத் தந்துள்ளது. 1947, 1948ஆம் ஆண்டுகாலப் பகுதியில் 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகையை வரதர், முருகானந்தன், சி்மா நடராஜன் போன்ற எழுத்தாளர்கள் இணைந்து வெளியிட்டுவந்தார்கள். அச்சஞ்சிகையில் 6 சிறுகதைகளை எழுதிப் பெயர் பெற்றவர் புலோலியூரைச் சேர்ந்த கு.பெரியதம்பி என்ற எழுத்தாளர் ஆவார்.

இது ஈழத்துச் சிறுகதைக்குப் பெருமை சிறப்புச் சேர்த்துள்ளது. இவரைத் தொடர்ந்து க.சதாவும், கே.கந்தசாமி, ஆ.இரத்தினவேலோன், என்.கே.ரகுநாதன் ஆகிய எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் பிரவேசித்துத் தரம் மிக்க, சிறப்புமிக்க, காத்திரமான சிறுகதை இலக்கியத்தைப் படைத்தார்கள். இவர்கள் அனைவரும் புலோலியூரைச சேர்ந்தவர்களே. இத்தனை படைப்பாளிகளையும் புலோலியூர் தந்ததையிட்டு பாராட்டுவதுடன் மகிழ்ச்சியும் அடைகிறேன். புலோலியூர் தம்பையா ஏற்கனவே 'அழியாத கோலங்கள்' என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். 'ஐம்பதிலும் ஆசைவரும்' எனும் இச்சிறுகதைத் தொகுதி அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும்.

ஏனைய ஈழத்துச் சிறுகதைகளிலும பார்க்க இந்நூலில் வெளிவந்துள்ள சிறுகதைகள் வித்தியாசமானவை, தனித்துவமானவை, நகைச்சுவையோடு சமூகத்தைப்பார்த்து எள்ளலாக இச்சிறுகதைகளைப் படைத்துள்ளார். இயல்புநிலை, நடத்தைகள மாறாத பாங்கு இச்சிறுகதைகளில் காணப்படுகின்றன.

1875ஆம் ஆண்டு முதலாவது சிறுகதை 'உதயதாரகை' பத்திரிகையில் வெளிவந்தது. இவ்வரிசையில் புலோலியூர் தம்பையா ஈழத்து இலக்கியத் துறையில் நான்காவது தலைமுறைப படைப்பாளி. சமுதாயம் எப்படி இருக்க வேண்டும். சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சொல்வதுதான இலக்கியம்.

அந்தவகையில், ஈழத்து இலக்கியத்தில் புதியதொரு பாணியை எழுத்தாளர் தம்பையா அறிமுகப்படுத்தியுள்ளார். எழுத்தாளர் ஆ.இரத்தினவேலோன், தொழில் அதிபர் லயன் சற்குணத்தின் உதவியுடன் மீரா பதிபபக வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. கொழும்பில் உள்ள மீரா பதிப்பகம் நல்ல நூல்களை வெளியிட்டு வருகிறது. யாழ்ப்பாணத்திலும் 25 வருடங்களுக்கு முன்பு மீரா பதிப்பகம ஒன்று இருந்தது. அப்பதிப்பகம் 25 சிறுகதை இலக்கிய நூல்களை வெளியிட்டிருந்தது என்றார்.

### நல்லை ஆதீனம்

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையில் கூறியதாவது:-

நாவலர் பெருமான் காட்டிய வழியில் நூல்எழுதும் பணியை மேற்கொணடுள்ள எழுத்தாளர் தம்பையாவின் இனறைய நூல் வெளியீட்டுவிழா சிறபபுற நடைபெறுகின்றது.

ஆசைகளை அறுக்க வேண்டும். இறைவனிடம் அன்பு வைத்தாலும் குடும்பத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சோதனைதான். இன்றைய வெளிநாட்டு வாழ்க்கை வேரூன்றியிருப்பதால், வெளிநாடுகளில் 50 வயதைக்கடந்தும் திருமணம் செய்கிறார்கள். அதைத்தான் இந்த எழுத்தாளா குறிப்பிடுகிறார் போலும்.

வயதான நேரத்திலும் சிரமமான காலத்தில் இந்த நூலை எழுதியதறகாக அவரை வாழ்த்துகிறோம். இந்த ஆசைகளோடு இறைவன்மீதுள்ள ஆசையையும் வெளிப்படுத்த வேண்டும். 60இற்கு மேல் மேலே போகின்ற காலம அதையும் வெளிப்படுத்தவேண்டும் என்றார்.



'சீமாட்டி' வெளியீடான, புலோலியூர் க.தம்பையா எழுதிய 'ஐம்பதிலும் ஆசைவரும்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் 'சீமாட்டி' வெளியீட்டகத்தைச் சேர்ந்த லயன் த.சற்குணராசா வரவேற்புரை நிகழ்த்துவதையும், பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்திடமிருந்து யாழ்.செயலகத் தலைமை உதவி அரசாங்க அதிபர் வீ.வீரபத்திரபிள்ளை சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்வதையும், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சு.பா.சுப்பிரமணியம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

### சி.க.சிற்றம்பலம்

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

வாசிப்பதற்கும், உள்வாங்குவதற்கும் ஏற்றதாகவுள்ள இது போன்ற நூல்கள் அதிகம் வெளிவர வேண்டும். சமகால வாழ்வை வெளிப்படுத்துவதுதான் இலக்கியம். ஈழத்தமிழரின் வீரம் உலகில் மிளிர்கிறது. அதே போல் இலககியத்துறையிலும் உலகில பேர்போனது ஈழம்தான்.

சமகாலத்தில் நிலவிய பிரச்சினைகளை ஹாஸ்யமாக எழுத்தாளர் தம்பையா இச்சிறுகதைகளில் கூறியுள்ளார். சமூகத்துக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி வழிநடத்துவதுதான் எழுத்தாளனின் கடமை. எழுத்தாளர்கள் நாணயமான சமுதாயத்தை உருவாக்கவேண்டும்.

1995இல் இடம்பெற்ற இடப்பெயர்வு மூலம் யாழ்ப்பாணத்தின் பெயர் உலகில் தெரியவந்தது.

வெளிநாட்டுப்பணத்தைக் கொண்டு கோவில்களில் சீர்கேடுகள் நடைபெறுகின்றன. திருமண நிகழ்வுகளில் 'வீடியோ' படப்பிடிப்புத்தான் முக்கியமாகவுள்ளது சுபமுகூர்த்தமல்ல. மணபபந்தலில் நல்ல நேரம் தாமதமானால் சமாளிக்கிறார்கள். எமது சம்பிரதாயங்களும் கைவிடப்படுகின்றன.

60 ஆயிரம் மக்கள் அகதிமுகாமகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சீரான கழிப்பிட வசதிகூடக் கிடையாது, உணவு வசதிகள் கிடையாது. கடந்த 10 ஆண்டுகளாக இந்நிலை நீடித்துவருகிறது. இவற்றுக்கு மத்தியில் மற்றொரு சமுதாயம் ஆடம்பரமாக வாழ்கின்றது.

இதுபோன்ற சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைத் திருத்துவது எழுத்தாளரின் கடமையாகும். இன்றைய காலகட்டத்தில் காலத்தின் தேவைக்கேற்ப சிறந்த சிறுகதைத் தொகுப்பு ஒன்றை எழுத்தாளர் புலோலியூர் க.தம்பையா தந்துள்ளார் என்றார்.

யாழ்ப்பாணம் சீமாட்டி நிறுவன அதிபர் லயன் த.சற்குணராஜா வரவேற்புரையும் 'கவிஞ' விகடகவி மு.திருநாவுக்கரசு ஆய்வுரையையும் நிகழ்த்தினார்கள். நூலாசிரியர் க.தம்பையா பதிலுரை வழங்கினார்.

(ஒ-173)

# தேவை மற்றும் குறைகள் பட்டியல்களுடன் இறைவணக்கம் செய்வதற்குப் போகாதீர்கள்!

## சுவாமி சைதன்யா அருளுரை

யாழ்ப்பாணம்,ஏப்.23

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் தனது மூன்றாவது நாள தொடர் விரிவுரையை பஜனையுடன் ஆரம்பித்தார் சுவாமி சைதன்யா. ஆதி சங்கராச்சாரியார் இறைவனிடம் மனமுருகி மன்னிப்பு வேண்டிய சமஸ்கிருத நூலாகிய "மன்னிப்பாயா" என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த விரிவுரைகளைச் சுவாமி செய்துவருகின்றார்.

இறைவனை எவ்வாறு தியானிக்க வேண்டும் என்ற வழிமுறைகளை ஆறாம் சுலோகத்தில் காணலாம். அதிகாலையில் எழுந்து விதி முறைப்படி குளித்துவிட்டு கங்கையின் தண்ணீரைக் கொணடு வந்து ஒரு நாளாவது நான் பூசிக்கவில்லை. உள்ளன அர்ச்சிகக காடுகளிலிருந்து வில்வத்தளைகள் கொண்டுவந்தேனா அதுவும் இல்லை. அழகிய தாமரை கொண்டுவந்து அசசித்தேனா? அதுவும் இல்லை. மலர் மாலை கட்டி உனக்கு அணி வித்து அழகுபார்த்தேனா? அதுவும் இல்லை. இவ்வாறு ஆதிசங்கரர் மனம் நொந்து இறைவனை வேண்டுகிறார். பிரம்ம முகூர்த்தத்தில் துயிலெழுந்து தினசரிக் கடமைகளை ஆரம்பிப்பதுதான நல்லதாகும். அதிகாலை மூன்றரை முதல் ஐந்தரைமணி வரையுள்ள காலத்தினை பிரம்ம முகூர்த்தம் எனலாம். அதிகாலையில் மனம் அமைதியாக இருக்கும். இயற்கை அமைதியாக இருக்கும். எனவே அதிகாலையில் குளித்து ஆசனம் செய்து பிரார்த்தனை செய்வது நல்லது.

ஆனால், இன்றைய உலகில் வார இறுதிக் கேளிக்கைகள் மிகவும் காலம் செல்லும் பின்னிரவு கேளிக்கை என்ற நிலையில் சூரிய உதயமே தெரியாத காணாத பாவிகள் பலர் காணப்படுகின்றனர்.

### அதிகாலை வழிபாடு அற்புதமானது

அதிகாலை வழிபாடு அற்புதமானது. "எழுகபுலர்மின்"என்ற யோகர் சுவாமிகளின் பாடல்களை சுவாமிகள் விரிவாக விளக்கினார்.

யாழ்ப்பாணத்தில் கோயில் வழிபாடு மிகவும் அற்புதமாக இருக்கிறது என இச்சந்தப்பத்தில் சுவாமிகள் கூறியது சபையை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

இறைவனை எவ்வாறு வழிபாடு செய்யவேண்டும் என்பது கேள்வியாகின்றது. அழுது கேட்டால் ஆண்டவன் அருள் புரிவார் என்று சுவாமி இராமகிருஷ்ணர் கூறியுள்ளதை நாம கருத்திற்கொள்ள வேண்டும் - என்றார் சுவாமிகள்.

பூஜை வழிபாட்டு முறைபற்றி ஆதிசங்கரரின் சுலோகத்தில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை சுவாமிகள் எடுத்துக்காட்டினார்.

சோடச உபசார பூசை பற்றி விளக்கினார். பதினாறு உபசாரங்களைக் கொண்டதுதான் இப்பூசை. கடவுளைப் போற்றிப் புகழ்ந்து உபசாரம் செய்யவேண்டும். அபிஷேகம் செய்ய வேண்டும். வஸ்திரம், ஆபரணம் அணிவித்து அழகு பார்க்கவேண்டும். சந்தணம், குங்குமம் சாத்தி வணங்க வேணடும். தூபதீபம் காட்டி, நைவேத்தியம் படைத்து கடவுளை வழிபாடு செய்யவேண்டும்.வழிபாடு செய்யும் போது மனம் நிரம்பியிருக்கவேண்டும். தூய்மையான உண்மையான பக்தியிருக்கவேண்டும்.

உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என்ற பாடலை சுவாமிகள் மேற்கோள் காட்டினார்.

கண்ணப்பரின் பூசை முறையையும் சபைக்கு மேற்கோள்காட்டினார். இறைவனுக்கு அவன் படைத்த படையல் சாஸ்திர விரோதமானது. ஆனால், இறைவனின் கண்ணில் இரத்தம் வழிந்தோடியபோது தன் கண்ணையே படுங்கி வைத்த அந்த அன்பு மகத்தானது.

கண்ணப்பரின் பூசை பரிசுத்த அன்பினாலான அற்புத பூசை என்று சுவாமிகள் மனமுருகிக் கூறினார்.

### மனம் ஒன்றிய பூசை தேவை

மனம் ஒன்றிய பூசைதான் முக்கியமானது. ஆனால், பெரும்பாலானோர் அகங்காரத்தோடு அலட்சியப் போக்காகவே ஆண்டவனை வழிபடுகின்றார்கள். அன்போடு பூசிப்பதைத் தவிர்த்து விடுகின்றார்களே என்று அங்கலாய்த்தார்.

ஆண்டவனை எப்படித் தியானிகக வேண்டும்? தூய்மையான மனத்துடன் மூன்று குணங்களையும் கடந்து, மனத்திலே எழக்கூடிய எல்லா மோகங்களையும் அழித்தவனாக மூக்கு நுனியில் கவனம் வைத்துத் தியானம் செய்யவேண்டும். இறைவனுக்கும் எமக்குமிடையே ஒளிவு மறைவே கூடாது. இது நிர்வாணம்.

### யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

அற்புதமான மகானாகிய யோகர் சுவாமிகளின் 'நற்சிந்தனை' நூலைப் படித்தாலேபோதும். "குழந்தையைப் போல் கடவுளைக் கும்பிட்டுக்கொள்" என்று எவ்வளவு ஆழமாக யோகர் சுவாமிகள் கூறியுள்ளார் என்று சுவாமிகள் வியந்தார். இச்சந்தர்ப்பத்தில் பாரதக் கதையொன்றைச் சுவைபடக் கூறி உண்மை நிலையை விளக்கினார். அன்பு செய்பவரும் அன்பு செலுத்துபவரும் கலப்பதுதான் உச்சம்.

நான் வேறு நீ வேறு என்ற நிலையேயிராது. நானே அவன், அவனே நான் என்ற பக்குவம் ஏற்படவேண்டும். அப்பாவாக, அம்மாவாக வியாபாரியாகத் தியானத்தில் அமரக்கூடாது. சிவத்தொண்டனாகவே தியானத்தில் அமரவேண்டும்.

நான் இறைவனின் சேவகன் என்ற மனதோடு தியானத்தில் அமர வேண்டும். மோசமான எண்ணங்கள் வந்தாலும் ஏற்கக்கூடாது. மோகத்தைத் துறந்து இறைவழிபாடு செய்யவேண்டும். உள்ளதை உள்ளபடி பார்க்காமல் இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்வதுதான் மோகம். எங்களிடையே சினிமா மோகம், அயல் நாட்டு மோகம் என்று எத்தனை மோகங்கள். உலகத்தில் எல்லாவற்றிற்கும் மதிப்பு உளது. ஆனால், தேவையற்றவைக்கு மேலான மதிப்புக் கொடுக்கக் கூடாது.

இதயத் தாமரை வணக்கம் இறைவனுக்குச் செய்யவேண்டும். இறைவன்தான் ஆனந்தப் பெருங்கடல். ஏனைய இன்பம் யாவுமே துன்பத்தின் விதையைக் கொண்டவை. இந்த இன்பம் நீடிக்குமா என்ற பயம் தோன்றியபோதே துன்பத்தின் விதை சேர்ந்து கொள்கின்றது. இறைவனோடு ஒன்றாகும்போதே அன்பின் பிரவாகம் ஏற்படுகின்றது. நாம் கோயிலில் அவசரப்படக் கூடாது. நாம் கோயிலுக்கு தேவைப்பட்டியலுடனோ குறைகள் பட்டியலுடனோ செல்லக்கூடாது. இறைவனுக்காகவே இறைவனை வணங்க வேண்டும் - என்று பூசைகளை விவரித்தார் சைதன்யா சுவாமிகள்.

**தொகுப்பு: சுடர் மகேந்திரன்**

# நெடுந்தீவு வெட்டுக்குளத்தை புனரமைக்க நடவடிக்கை

## யாழ்.செயலகம் மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,ஏப்.23

நெடுந்தீவு வெட்டுக் குளத்தைப் புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் 'நியாப்' திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கிலுள்ள நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் சிறுகுளங்களைப் புனரமைக்க 8கோடி அமெரிக்க டொலரை வழங்க உலக வங்கி முன்வந்தது.

அந்நிதியின் ஒருபகுதி யாழ். மாவட்டத்திலுள்ள குளங்களை நியாப் திட்டம் II இன் மூலம் புனரமைப்பதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இதன் ஒருகட்டமாக நெடுந்தீவில் உள்ள வெட்டுக்குளத்தைப் புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான குழுவினர் நாளை காலை நெடுந்தீவு செல்லவுள்ளனர்.

அரச அதிபருடன், யாழ். செயலக உயர் அதிகாரிகள், நியாப் உதவித் திட்டமிடற் பணிப்பாளர் மற்றும் கமநல திணைக்கள அதிகாரிகளும் செல்லவுள்ளனர்.

நாளை காலை நெடுந்தீவுக்குச் செல்லும் இக்குழுவினர் வெட்டுக்குளம், சாரப்பு நன்னீர் திட்டம் மற்றும் 30 வட்டுத் திட்டம் என்பவற்றைப் பார்வையிடுவதுடன், நெடுந்தீவு இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்தல் மாவலி இறங்குதுறையை ஆழமாக்குதல் போன்றவற்றைப் பற்றியும் ஆராய்வர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

## அயல் வீட்டுக்காரரை

# தடியால் அடித்து காயம் விளைவித்த நபருக்கு ஒத்திவைத்த சிறைத்தண்டனை

தடியால் அடித்து காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் இருவருடங்களுக்கு ஒத்திவைத்த ஒருவருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இல.19, உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியைச் சேர்ந்த யோகராசா கஜேந்திரன் என்பவருக்கே மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சந்தேக நபர் தனது அயல்வீட்டுக்காரரை தடியால் அடித்துக் காயம் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவரை குற்றப் பிரிவினர் யாழ்.நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைத்த ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கிய நீதிவான் ஐந்நூறு ரூபாவைத் தண்டப் பணமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

(8-5)

# பண்டத்தரிப்பு உணவகங்களில் திடீர் சோதனை

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள கடைகள், உணவகங்கள், தேநீர் சாலைகள் ஆகியவற்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த சனிக்கிழமையன்று திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். இப்பரிசோதனையின் போது காலாவதியான பிஸ்கற் பக்கற்றுகள் இரு கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. உணவகங்கள் சிலவற்றில உணவுப்பொருள்கள் மூடிவைக்கப்படாது இருந்ததை அவதானித்த பரிசோதகர்கள், அவற்றை ஈக்கள் மொய்க்காதவாறு பாதுகாப்பாக மூடி வைக்கும்படி அறிவுறுத்தினர்.

(ஒ-135)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி வீதியில் நொத்தாரிஸ் ஒழுங்கையில (ஞானம் கடையிலிருந்து கிட்டத்தட்ட ஐந்தாவது ஆதனம்) வெறுங்காணி 7 பரப்பு, வீடும் காணியும் 5 பரப்பு, நெல்வயல் 23 பரப்பு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவஞானம் ஞானசுந்தரன், C/o சி.எம். இராஜேந்திரா, வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை.

(31090)

மொபிட்டல் மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: கபில், T.P.: 071 2797025, 0602212775

(31110)

கண்ணகி அம்மன் வீதி, தும்பளை மேற்கு, தும்பளை, பருத்தித்துறையில் 16 பரப்பு சதுரக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.இராதாகிருஷ்ணன், 357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (சிவன் கோயில் அருகில்). T.P.:222 7599, 077 6002635.

(31133)

8 ஸ்ரீ XXXX தொடரிலக்கமுடைய பேர்ஜோ கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

(31065)

### தேவை

இலங்கையில் முன்னணி வகிக்கும் கணனி நிறுவனமொன்றின் யாழ். கிளையினை நிறுவுவதற்கு நகரின் மத்தியில் அல்லது அண்மையாக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வீடு தேவை. தொடர்பு: 021 222 6933

(சி-34488)

### தவறிவிட்டது

P.M.H. மொஹிதீன் என்பவரது தே.அ.அ.(551512665X), சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 19.04.2004 அன்று பண்டத்தரிப்புக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாதுமை புடவையகம், பிரதான வீதி, பண்டத்தரிப்பு என்னும் முகவரியுடன் அல்லது 0777 626907, 011 2344686 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(31153)

க.செல்வரத்தினம் என்பவருடைய தே.அ.அ (இல.590924202V), தொழில் அ.அ., வி.அ.அ. என்பன கோப்பாய்க்கும், மருதனார்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் வசந்தபுரம், இளவாலை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(31149)

## பாதையைத் திறக்க நடவடிக்கை

தென்மராட்சி,ஏப்:23

தென்மராட்சி தெற்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நலன்கருதி மறவன்புலோவிலிருந்து நுணாவில் ஊடாகச் சாவகச்சேரிக்குச் செல்வதற்கான கொல்லங்கிராய் வீதியைத் திறப்பதற்குப் படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

சாவகச்சேரியில் கல்விகற்கும் மாணவர்கள் கோவிலாக்கண்டி கடலேரியில் தொழில்செய்யும் கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி இந்த வீதி திறக்கப்படவுள்ளதாகவும் -

மறவன்புலோ பகுதியில் படைமுகாம் அமைக்கப்பட்டதால் இவ் வீதி பொதுப்போக்குவரத்துத் தடை செய்யப்பட்டதாகவும் -

பொதுமக்களின் வசதிக்காக முகாம் பாதுகாப்பு மண் அணைக்கு முன்பாகப் புதிய பாதை செப்பனிடப்பட்டு கொல்லங்கிராய் வீதியுடன் இணைத்து போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## அலுவலகம் இடம்மாற்றம்

குருநகர்,ஏப்.23

யாழ். கச்சேரி - நல்லூர் வீதியில் யாழ். பிரதேச செயலகம் இயங்கி வந்த கட்டடத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். கிளை அலுவலகம் தற்போது இயங்கி வருகிறது.

இந்த அலுவலகம் முன்னர் முத்திரைச்சந்திப் பகுதியில் இயங்கி வந்தது.

(ஒ-51)


SAAMSTECH இன்

இலவச ஆங்கில நேரடி வகுப்பு

2006 இற்கு முன் இலங்கையில் முழுமையான ஆங்கில அறிவினை விருத்திசெய்யும் SAAMSTECH இன் மாவட்ட ரீதியிலான இலவச வகுப்பு

ஒரு மணிநேரத்தில் இலகுவாக ஆங்கிலத்தில் கதைக்கலாம்.

சந்தேகம் வேண்டாம். 2, 3 வயதில் சரளமாக ஆங்கிலத்தினைக் கதைக்கும் ஆங்கிலக் குழந்தைகளுக்கு ஆங்கில இலக்கணம் தெரியாது. 200, 300 சொற்கள் மட்டுமே தெரியும் அதைவிட அதிகமான சொற்கள் உங்களுக்குத் தெரியும். உங்களால் ஒருமணிநேரத்தில் இலகுவாக சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கமுடியும்.

SAAMSTECH இன் ஒருமணிநேர நேரடி வகுப்பு மூலம் இதுவரை ஆயிரக்கணக்கானோர் சரளமாக ஆங்கிலத்தினைக் கதைக்கிறார்கள்.

★ மாணவர்கள் ஆங்கில பாடத்தில் முழுமையான தேர்ச்சி பெறலாம்.
★ கணனி உயர்கல்வி, பல்கலைக்கழக மாணவர்கள் ஆங்கில கற்கைநெறிகளை இலகுவாக மேற்கொள்ளலாம்.
★ பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு இலகுவாக ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுக்கலாம்.
★ பட்டதாரிகள் நேர்முகத்தேர்வுகளில் இலகுவாக ஆங்கிலத்தில் பதிலளிக்கலாம்.
★ ஆசிரியர்கள், எந்தவொரு பாடத்தினையும் ஆங்கிலத்தில் கற்பிக்கலாம்.
★ அரச, தனியார் அலுவலர்கள் எந்தவொரு காரியத்தினையும் ஆங்கிலத்தில் கையாளலாம்.
★ இளைஞர், யுவதிகள் வெளிநாட்டுத் தூதரகங்களில் முழுமையாகப் பதிலளிக்கலாம்.

புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பு

இடம் :- யாழ். மத்திய கல்லூரி

காலம் :- நாளை (24.04.2004) சனிக்கிழமை

வகுப்புகள்:-(1) காலை 8.30 - 9.30 (2) காலை 9.30 - 10.30 (3) காலை 10.30 - 11.30 (4) மாலை 1.30 - 2.30 (5) மாலை 2.30 - 3.30 (6) மாலை 3.30 - 4.30 (7) மாலை 4.30 - 5.30 (8) மாலை 5.30 - 6.30

(ஏதாவது ஒரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்).

அனுமதி இலவசம் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் கலந்துகொண்டதற்கான சான்றிதழும் இலவசமாக வழங்கப்படும்.


குறிப்பு: கடந்தமாதம் யாழ். பல்கலைக்கழகம், யாழ். மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை (தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாண கல்லூரி, பட்டதாரிகள் பிரிவு, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெற்ற வகுப்புகளில் கலந்துகொண்டோர் சான்றிதழை நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளலாம்.

PSALM INSTITUTE OF ENGINEERING AND TECHNOLOGY

22 -1/4, Galle Road, Dehiwala. 011- 5559222

C-34600) (34-14-18-24)





# மரண அறிவித்தல்கள்

## ஐயம்பிள்ளை கந்தையா



மண்கும்பான், 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 20/33 வைரவர் கோவிலடி (கூழாவடி) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமான ஐயம்பிள்ளை கந்தையா அவர்கள் 21-04-2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்கும்பான் சாட்டி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல,20/33 வைரவர் கோவிலடி,*
*(கூழாவடி ஒழுங்கை)*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (31177)(36-11-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## திருமதி கந்தசாமி முத்துமாணிக்கம்



பருத்தித்துறை, தும்பளை, பள்ளம்பாதியைப் பிறப்பிடமாகவும் 122/18, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி முத்துமாணிக்கம் அவர்கள் 20.04.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சின்னப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுததுரை - இராசமமாவின் அன்பு மருமகளும் கந்தசாமி (ஓய்வுபெற்ற பொலீஸ உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் திருதிருமதி திருநாவுக்கரசு (திரு)வின் அன்பு மைத்துனியும் செல்வி க.நாகேஸ்வரி (மயூரா பார்மஸி, கொழும்பு), சு.விஜயராணி (ஆனைப்பந்தி), ஸ்ரீகாந்தா (சுவிஸ்), ஸ்ரீகருணா (சுவிஸ்), ஸ்ரீ குலேந்திரன் (சுவிஸ்), ஸ்ரீரவி (சுவிஸ்), சோ.புஸ்பராணி (சுவிஸ்), மு.செல்வராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஸ்ரீரகு ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாபூஷணம் - சுந்தரலிங்கம் (ஓவியர்), சாந்தநாயகி (சுவிஸ்), தயாநிதி (சுவிஸ்), இராஜேஸ்வரி (சுவிஸ்), சிவபூரணி (சுவிஸ்), சோமசுந்தரம் (சுவிஸ்), ஸ்ரீமுருகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும கோபிநாத், ஸ்ரீசுதன், சுகிந்தன், சுபித்தா, ஸ்ரீசுகந்தன், சங்கரி, சௌந்தரி, பஜிதன், சுஜிதன், வஜிதன், அஸ்வினி, அஜிதன், அபிந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருக்குமார் (கனடா), யு.சசிகலா, செந்தில்குமார் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் பிரியங்கா, டிலக்ஷிகா, பவிதன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம், கோம்பையன் மணல் இந்து மயானத திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*122/18, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.* (C/344613)(36-11-16)

தகவல்:
பிள்ளைகள்.

## சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)

நெல்லியடி - கரவெட்டி தபாற்கந்தோரடியைச்சேர்ந்த சுவாமபிள்ளை மரியாம்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் நேற்று (22.04.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கலாபூஷணம் - சங்கீதபூஷணம் திருமதி அக்னெஸ இராசம்மா மரியாம்பிள்ளையின் அன்புக் கணவரும். ரூபன் (தினக்குரல்), சுபேந்திரன் (அருள் ஊற்று), வரதராஜன் (சக்தி T.V), திருமதி ராஜினி வின்சிலி (U.K), தீசன் (காலஞ்சென்ற போராளி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி (கொழும்பு), செல்வராணி (ஆசிரியை சென். பற்றிக்ஸ் கல்லூரி, தலவாக்கலை), ஜெஸ்லின் (ஆசிரியை இரத்மலானை இந்துக்கல்லூரி), அந்தோனிமுத்து வின்ஸிலி (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருபன் (பம்பலப்பிட்டி இந்துகல்லூரி), ஷாளு (சென். பற்றிக்ஸ் கல்லூரி- தலவாக்கலை), கிஷாளன்(சென். தோமஸ் கல்லூரி- இரத்மலானை), லனிஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நீக்லஸ் (C.G.R), இசபெல்லா, அக்னேஸ் அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் மரணச்சடங்குகள் இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தபாற் கந்தோர் வீதி,*
*நெல்லியடி,கரவெட்டி வடக்கு* (C-34614)(36-11-16)

தகவல்:
M.சுபேந்திரன்(மகன்).

## பதினொராம் திருவிழா

வண்ணார்பண்ணை, அரசடி விநாயகர் ஆலய பதினொராம் திருவிழா இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

நண்பகல் விஷேடஅபிஷேகமும் அன்னதானமும் மாலை 5.30 மணிக்கு எம்பெருமானின் திருவீதி உலாவும் அதனைத் தொடர்ந்து இரவு விஷேட நிகழ்வாக -

★ ஜெகன் குழுவினர்.
★ குகன் குழுவினர்.
★ V.K.பஞ்சமூர்த்தி குழுவினரினதும் மேளக்கச்சேரியும்
★ ஐங்கரன் இசைக்குழுவினரின் இன்னிசையும் இடம்பெறும்.

- விழா உபயகாரர். (31185)

## தவறிவிட்டது

கார் திறப்பு ஒன்று ஆஸ்பத்திரி வதி, யாழ்ப்பாண பஸ் நிலையத்திற்கு முன்னால் தவறிவிட்டது. திறப்புடன் பச்சை நிறக் கோர்வை மற்றும் சிறிய திறப்பு ஒன்றும் உள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் அற்புதா ரேடிங் கொம்பனி, இல.198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (31180)(38)


கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை

இலவசம்

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:
யசோ,
35, கன்னாதிட்டி விதி,
யாழ்ப்பாணம். (30331)

நிரஞ்சனாஸ் சங்கானை



அர்ஜுன், அப்ராமி, பிரகாஷ்ராஜ் நடித்த
வாஞ்சிநாதன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
BRUCE WILLIS நடித்த
MERCURY RISING
(#34420(12)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசன்னா, அனு, வடிவேல்
புதிய வெளியீடான நடிக்க
காதல் டாட் கொம்
24 ஆம் திகதி முதல் ஜெய்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/34180(12)

ராஜா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(ரீலஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/34517)(27)


## இணுவில் பொதுநூலகம் சனசமூகநிலையம் இணுவில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இடம்:- இணுவில் பொதுநூலக கலாசார மண்டபம்
நேரம்:- காலை 9.00 மணி.
வழங்குபவர்கள்:- 25-04-04 (ஞாயிறு)
இணைந்த கணிதம் - திரு.சற்குணராஜா (யாழ்.பல்கலைக்கழகம்)
பௌதகவியல்: - திரு.குமரன்(B.Sc.)
26-04-04 (திங்கள்)
கணக்கீடு :- திரு.பாலவாசன்(B.B.A.(FM.Spl)

★குறிப்பேடுகள் வழங்கப்படும்

திரு.க.தேவராஜா (வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம், கலாநிதி.திரு சற்குணராஜா (சிரேஷ்டவிரிவுரையாளர்) ஆகியோரால் புள்ளி வழங்கும் போது கவனிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக கருத்து வழங்கப்படும்

இணுவில் பொது நூலகம்,
ஸ்ரீ பராச சேகரப்பிள்ளையார் கோவிலடி,இணுவில். (சி-34617)(36-11-13)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனேநம

## எமது நெஞ்சைவிட்டகலாத அன்புத் தெய்வத்தின் பன்னிரண்டாவது வருட நிறைவு நினைவஞ்சலி



சங்கானை நிகரை வீதியைச் சேர்ந்த
அமரர் கதிர்காமர்
ஆசைப்பிள்ளை

மலர்வு 20-03-1914 | உதிர்வு 06-05-1992

திதி: (23.04.2004) வெள்ளிக்கிழமை

வெள்ளி வீழ்வது விடியலுக்காய் ஐயாவே!
நீங்கள் ஏன் வீழ்ந்தீர்கள்.
விடைதெரியாமல் வாழ்கின்றோம் உங்கள் நினைவோடு
ஆண்டுகள் பன்னிரண்டென்ன எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்
மறவோம் உங்கள் பணியை! நீதியாய், நேர்மையாய்
நீங்கள் நடந்த பாதையில் நாமும் நடக்கின்றோம்.
உங்கள் பாதச் சுவடுகளைப் பின்பற்றி!


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆசைப்பிள்ளை அன்சன் நகைமாடம்
*"திருமகள் வாசம்"*
*நிகரை வீதி, சங்கானை,*
*தொலைபேசி: 0602-212399, 0602-212418*

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(31184)(37-11-16-36)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நெஞ்சம் மகிழ 18 ‍௨ 11 ‍௨ 1936



உள்ளம் உருக 05 ‍௨ 05 ‍௨ 2003

'சிவத்தமிழ்மணி'
அமரர் மாப்பாணர் துரைராசா
(முன்னாள் லிகிதர் - சாவகச்சேரி நகரசபை)
திதி: 23-04-2004 சதுர்த்தி

நெஞ்சமெல்லாம் நிறைந்து விட்டதெய்வமே!
வஞ்சனை இல்லாமல் வாழவைத்த தெய்வமே!
சொல்லுக்குள் சொல்லைச் சுருக்கிவைத்த சோதியமே!
சொல்லொணாச் சுடர்ஒளியே! அப்பா!
ஆறுதல் அளிக்க ஆயிரம் உறவுகள் இருந்த போதும்
அன்புடன் அரவணைக்க அன்புள்ளவர் இருந்த போதும்
'அப்பா' என்றழைக்க இனி
நீங்கள் இல்லையே அப்பா?

வயாவிளான்,
மீசாலை மேற்கு.
(31174) (26-11-16-36)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாம்பிகை நவரத்தினம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை நவரத்தினம் அவர்கள் நேற்று (22.04.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மகளும் நடராசா மயில்வாகனம், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் தேவிகாராணி ஆகியோரின் சகோதரியும் தஸகுமாரன், தயாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவபாலன், கௌசலா ஆகியோரின் மாமியாரும் ஜனார்த்தனி, றெஷானந்தன், போபிதர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2004) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.19,அரசடி ஒழுங்கை,*
*தட்டாதெரு, யாழ்ப்பாணம்.* (31183)(37-11-16-36)

தகவல்:
ந.தஸகுமாரன் (மகன்).


# தென்னிந்திய திருத்தல யாத்திரை

## தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்

★புட்டபத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தரிசனம். திருப்பதி, சென்னை, மகாவலிபுரம், மெரீனாபீச், காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள், சிதம்பரம் நடராஜர், தில்லை காளி அம்மன், திருவாரூர், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி , பூம்புகார், குற்றாலம் , நாமக்கல் ஆஞ்சநேயர், தஞ்சாவூர், தஞ்சைப் பெருங்கோயில், திருச்சி உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், பழனி, மதுரை மீனாட்சி ஆலயம், மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வள்ளி குகை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமி மலை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவேனி சங்கமம், குமரி அம்மன் ஆலயம், காந்தி மண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம் திருவள்ளுவர் சிலை கடலில் யந்திரபடகுமூலம் சென்று பார்த்தல், திரு அரங்கநாத சுவாமி, திருவரங்கம், திருவளைக்காவல் சிவன் கோவில், சமயபுரமாரியம்மன்.

★யாத்திரிகளுக்கு சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும், முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசுவாகனங்களில் வழிகாட்டித்துணையுடனான பிரயாணமும் உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.

★இத்திருத்தல யாத்திரை மே 5 ஆம் திகதி ஆரம்பமாகும். யாத்திரிகர்களின் எண்ணிக்கை வரையறைக்குட்பட்டிருப்பதால் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

★நியாயமான கட்டணம்.

Metro Travel & Tours (Pvt) Ltd,
No.4031/2,Galle Road,Wellawatta,Col-06.
Tel:2362766,4510562,2361888 fax:2361888
(இலங்கை உல்லாசப் பிரயாண சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)
(சி34604)(37-16-11-36)

# எதிரணியின் லொக்கு பண்டார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெடுப்பு, சபை உறுப்பினர்களால் இடைநடுவில் குழப்பப்பட்டது.

மூன்றாவது வாக்கெடுப்பிலேயே சபாநாயகர் தெரிவு சாத்தியமானது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 10 மணிக்குக் கூடியதும் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகர, சபாநாயகர் தெரிவுக்கான பெயர்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் சபாநாயகர் பதவிக்கு டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டாரவின் பெயரை முன்னாள் சபாநாயகர் ஜோஸப் மைக்கல் பெரேரா முன்மொழிந்தார். அதை முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வழிமொழிந்தார்.

இதன்பின்னர் அரசுத் தரப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது தரப்பு வேட்பாளராக டியூ குணசேகரவின் பெயரை முன்மொழிந்தார். ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல வீரவன்ஸ அதை வழிமொழிந்தார்.

இரண்டு பெயர்கள் பிரேரிக்கப்பட்டதால் சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்களிப்பு நடைபெறும் என நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவித்தார்.

அதனைத்தொடர்ந்து சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாக்குச்சீட்டு விநியோகிக்கப்பட்டது.

இந்த வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்ட பின்னர் தமிழ்க் கூட்டமைப்பினரில் சிலர் ஐ.தே.க. உறுப்பினர்களிடம் வாக்களிப்பது பற்றி வாக்குச்சீட்டுகளைக் காட்டிக் கதைத்துக் கொண்டிருந்ததைக் கண்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆவேசமுற்று அமளிதுமளியில் ஈடுபட்டனர்.

பின்னர், விநியோகிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களை திரும்பப் பெறுமாறு கோரி ஆளுங்கட்சியினர் உரத்துச் சத்தமிட்டு ஆரவாரம் செய்தனர்.

இதற்கிடையில் முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், மகிந்த சமரசிங்க போன்றோர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ சபாநாயகர் தெரிவு தொடர்பான நிலையியற் கட்டளையை வாசிக்கும்படி கோரினார்.

### முதல் வாக்களிப்பு

இதற்கிடையில், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண.மேதானந்த தேரர், மக்கள் சபையை அமளிதுமளிப்படுத்தாமல் மக்கள் பிரதிநிதிகளாக நடந்து கொள்ளுங்கள் எனக் கூறினார்.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் எடுக்கும் இறுதிமுடிவுக்கு தலைவணங்குமாறும் அவர் கோரினார்.

அதனடிப்படையில் சபையின் நடுவில் வாக்குப்பெட்டி வைக்கப்பட்டு வாக்கு அட்டைகளும் அருகில் வைக்கப்பட்டு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஒவ்வொரு எம்.பியும் எழுந்து வந்ததும் அவருக்கு ஒரு வாக்குச் சீட்டு வழங்கப்பட்டது. அதில் தாம் சபாநாயகராகத் தெரிவு செய்யும் வேட்பாளரின் பெயரை எழுதிக் கீழே ஒப்பமிடுமாறு கோரப்பட்டது. அவ்வாறே ஒவ்வொருவரும் வாக்களித்தனர்.

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களில் தமது பதவியை இராஜினாமாச் செய்தார் என அறிவிக்கப்பட்ட கிங்ஸ்லி இராசநாயகம் சபையில் பிரசன்னமாகாத காரணத்தினால் அவரது வாக்கு அளிக்கப்படவில்லை.ஜாதிக ஹெல உறுமயவின் ஏழு பிக்குகள் வாக்களிப்பில் ஈடுபடவில்லை. அந்தக்கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் வாக்களித்தனர்.

ஆறுமுகன் தொண்டமான், புத்திர சிகாமணி போன்ற இ.தொ.காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களித்தபோது ஆளும் கட்சிதரப்பிலிருந்து கூச்சல் எழுப்பப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் வாக்குச்சீட்டில் தாம் யாருக்கு வாக்களிக்கின்றார்களோ அவரின் பெயரை எழுதியதும் வாக்குச்சீட்டை உயரத் தூக்கிப்பிடித்து எதிர்க்கட்சி எம்.பிக்களின் பக்கம் காட்டினர். இதன் மூலம் தாங்கள் யாருக்கு வாக்களித்தனர் என்பதைத் தமது தரப்பினருக்கு அவர்கள் வெளிப்படுத்தினர்.

முதல் வாக்களிப்பு 12.35 இற்கு முடிவுற்றது. வாக்குகள் எண்ணப்பட்டு பிற்பகல் 1.15 மணிக்கு முடிவு அறிவிக்கப்பட்டது.

மொத்தமாக உள்ள உறுப்பினர்களில் ஜாதிக ஹெல உறுமயவின் ஏழு உறுப்பினர்களும் தமிழ்க் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினருமாக மொத்தம் எட்டு எம்.பிக்கள் வாக்களிக்காமல் போக எஞ்சிய 217 எம்.பிக்கள் வாக்களித்திருந்தனர்.

அந்த 217 பேரின் வாக்குகளில் ஒன்று கையொப்பம் இல்லாததால் நிராகரிக்கப்பட எஞ்சிய 216 வாக்குகளில் இரு வேட்பாளருமே சரிசமமாக தலா 108 வாக்குகளைப் பெற்றிருந்தனர் என அறிவிக்கப்பட்டது.

இதனால் சபாநாயகர் தெரிவு தொடர்பான நிலையியல் கட்டளை விதிகளின்படி மீண்டும் ஒரு தடவை வாக்கெடுப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

### இரண்டாவது வாக்கெடுப்பு

இரண்டாவது தடவையாக பிற்பகல் 1.35 மணிக்கு வாக்கெடுப்பு ஆரம்பமானது.

இரண்டாவது முறை வாக்கெடுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாக்குச் சீட்டுக்களை வாக்குப்பெட்டிக்குள் போடுவதற்கு முன்னர் அதைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு தமது கட்சியினருக்குக் காட்டி தாம் யாருக்கு வாக்களித்தோம் என்பதை வெளிப்படுத்திவிட்டே அதனைப் பெட்டிக்குள் போட்டனர்.

இதனை ஆட்சேபித்த ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே, அனுரா திஸநாயக்க, பவித்திரா வன்னியாராச்சி, மகிந்தானந்தா அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்த்தன, அநுரா பண்டாரநாயக்க உட்பட சுமார் 35 உறுப்பினர்கள் சபையின் நடுவுக்கு வந்து அமர்ந்துகொண்டு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

வாக்குப்பெட்டியை சபை நடுவில் வைத்து அதன் மேல் மகிந்தானந்த அளுத்கமகே அமர்ந்துகொண்டார்.

நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் இந்தத் திடீர் நிலைமையைச் சமாளிப்பதற்கு வழியின்றி முடிவெடுக்க முடியாமல் தவித்தார். மொத்தம் 12 பேர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

வாக்களிப்பை நிறுத்தி மீண்டும் ஜனநாயக ரீதியில் இரகசிய வாக்களிப்பை நடத்தவேண்டுமென அவர்கள் வலியுறுத்திச் சத்தமிட்டனர்.

பிற்பகல் 2.40 மணியளவில் திடீரென ஏற்பட்ட இந்த நிலையை அடுத்து சபை நடுவுக்கு வந்த ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, ரவூப்ஹக்கீம் போன்றோர் அநுரா பண்டாரநாயக்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ போன்றோருடன் சமரச முயற்சிகளில் ஈடுபட்டனர்.

எனினும் சத்தியாக்கிரகிகள் அந்த இடத்தை விட்டு அகலவில்லை.

பிற்பகல் 5.15 மணிக்கு சமரசம் ஏற்பட்டதை அடுத்து மீண்டும் புதிதாக மூண்றாவது முறையாக தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டு அதன்படி வாக்களிப்பு இடம்பெற்றது.

வாக்குகள் எண்ணப்பட்டு இரவு 7.15 மணிக்கு முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

லொக்குபண்டார 110 வாக்குகளையும், டியூ குணசேகர 109 வாக்குகளையும் பெற்றனர் என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவித்தார்.

புதிய சபாநாயகராக லொக்குபண்டார உடனடியாகப் பொறுப்பேற்றார்.

அவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும், ஐ.தே.கட்சி உறுப்பினர் ஒருவரும் சபாநாயகர் ஆசனத்துக்கு அழைத்துச் சென்றனர். பதவியைப் பொறுப்பேற்றதும் முதலில் சபாநாயகர் உரையாற்றினார். தொடர்ந்து கட்சிகளின் நாடாளுமன்றக் குழுத்தலைவர்கள் உரையாற்றினர்.

தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றியபோது ஆளும் கட்சி வரிசையில் இருந்தவர்கள் பெரும் கூச்சலிட்டனர். பின்னர் நிலைமை சீரானது. (எ-க-7-ரி)

## மூன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குச் சீட்டில் தெளிவாக எழுத வேண்டும்.

★ வாக்குச்சீட்டில் அதை அளிக்கும் எம்.பியின் கையொப்பம் தெளிவாக இடப்படவேண்டும்.

★ வாக்களிக்கும் எம்.பி.தாம் யாருக்கு வாக்களித்தார் என்பதை வெளியே காட்டக்கூடாது. சபாநாயகர் தெரிவு தொடர்பான நிலையியல் கட்டளைக்கு அமைய வாக்களிப்புத் தொடர்பான இரகசியம் பேணப்படவேண்டும்.

இந்த நிபந்தனைகளை இரு தரப்பு எம்.பிக்களும் ஏற்றுக்கொண்டதை அடுத்தே மூன்றாவது தடவையாக வாக்களிப்பு ஆரம்பமானது.

இரண்டாவது தடவை நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது அரசுத்தரப்பு எம்.பிக்கள் எழுந்து சென்று வாக்குப் பெட்டியின் மீது அமர்ந்து கொண்டனர். அத்தகைய நிலை மூன்றாவது தடவை நடைபெறும் வாக்கெடுப்பில் இடம்பெறாமல் தடுப்பதற்காக - தவிர்ப்பதற்காக - மூன்றாவது வாக்கெடுப்பின்போது வாக்குப்பெட்டி சபாநாயகர் ஆசனத்தின் மீது வைக்கப்பட்டது. (எ-க)

## அமெரிக்கத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் புதன்கிழமை யாழ்.ஆஸ்பத்திரியில் மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தவுள்ளது. இந்தக்குழுவினருடன் அமெரிக்கத்தூதுவர் வருகை தருவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றனர்.

பிக்கு எம்.பிக்களில் ஒருவர் வாகனத்தில் அமர்ந்தபடி தமது மடியில் வைத்து புத்தர் சிலையை எடுத்துச் சென்றார்.

அதேசமயம், தமிழ்க்கூட்டமைப்பின் 19 ஆண் எம்.பிக்கள் பட்டுவேட்டி சால்வையுடனும், இருபெண் எம்.பிக்களும் சேலையுடனும் பாரம்பரிய உடையணிந்து சபைக்குச் சமுகம்தந்தனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் சபைக்குள் ஒன்றாகப் பிரவேசித்தனர். மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனும், ராதா கிருஷ்ணனும் ஒன்றாகவேசபைக்கு வந்தனர். ஜே.வி.பி. உறுப்பினர்களும் எவ்வித ஆரவாரமும் இன்றிச் சபைக்கு வந்தனர்.

மீட்டல் விரிவுரைகள்
(வெளிவாரி யாழ்.பல்கலைக்கழகம்)
பொதுக் கலைமாணி பகுதி I (B.A. PART I)
ஆரம்பம் 24.04.2004 காலை 11மணி
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-34605)

## செங்கோலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிமார் அனைவரும் எழுந்து நின்று செங்கோலுக்கு மரியாதை செலுத்தினர்.

செங்கோல் சபைக்கு எடுத்துவரப்படும்போது எம்.பிக்கள் எழுந்து நின்று அதற்கு மரியாதை செலுத்துவது மரபு ரீதியான நடைமுறை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## சபாநாயகரைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு ஒத்திவைத்து, அன்றைய கூட்டத்தை முடித்து வைக்கும் அறிவிப்பை சபாநாயகர் மட்டுமே செய்யமுடியும் அல்லது சபாநாயகருக்குப் பதிலாக அவரின் பணியை ஆற்றும் பிரதி சபாநாயகரோ அல்லது குழுக்களின் தலைவரோதான் செய்யமுடியும்.

புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டால்தான் அவரை சபாபீடத்தில் வைத்துக்கொண்டு பிரதி சபாநாயகரையும் குழுக்களின் தலைவரையும் தெரிவு செய்யமுடியும்.

புதிய சபாநாயகரைத் தெரிவு செய்யும் நடவடிக்கை நேற்று மாலை வரை இழுபட்டதால் அடுத்தது என்னவென்று தெரியாதபடி ஒரு குழப்ப நிலை நாடாளுமன்றத்தில் நிலவியது.

எப்படியும் புதிய சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்யாமல் - எத்தனை மணி நேரம் சென்றாலும் - எத்தனை நாள் கழிந்தாலும் - சபையை ஒத்திவைக்க முடியாது என்ற இக்கட்டு நிலவியது.

அதனால், எப்படியும் சபாநாயகர் ஒருவரைத்தெரிவு செய்ய வேண்டும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து, சுமுகமாக அந்த நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதில் கட்சிகளின் தலைவர்கள நேற்று மாலை முனைப்புக் காட்டினர்.

அதனால் மூன்றாவது வாக்கெடுப்பு சர்ச்சையின்றி நடக்கும் சூழ்நிலை ஏறபட்டது. (க)

# வடகொரியாவில் கோர ரயில் விபத்து மூவாயிரம்பேர் உயிரிழந்தனர்?

பயொங்யாங்,ஏப்,23

வடகொரியாவில் இரண்டு ரயில்கள் நேருக்குநேர் மோதிக் கொண்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் சுமார் மூவாயிரம் பேர் உயிரிழந்தோ அல்லது பலத்த காயங்களுக்கு உள்ளாகியோ இருககலாம் என்று அஞ்சப்படுகிறது.

வடகொரிய நகரான பயொங்யாங்கிலிருந்து 50 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ரையொங்சொன் ரயில் நிலையத்தில் கொரிய நேரப்படி நேற்றுப்பிற்பகல் ஒருமணியளவில் இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது.

இந்த ரயில்களில் ஒன்று வகதிகளையும், மற்றையது எரிபொருளையும் ஏற்றிவந்ததாகவும் கூறப்பட்டது. ரயில்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதிக்கொண்டதை அடுத்துப் பரவிய தீயினால் குறித்த ரயில் நிலையப்பகுதி முற்றாக அழிந்து விட்டது என ரயில் பயணிஒருவரை ஆதாரம் காட்டி பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது. (எ-7-ரி)

## இரண்டாவது வாக்கெடுப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம 108 பேர் அரசுத்தரப்பு வேட்பாளருக்கு வாக்களித்துள்ளனர். அது தவிர எதிர்தரப்பிலிருந்து ஒரு வாக்கு அரசதரப்புக்கு வீழ்ந்துள்ளது. இப்படி அரச தரப்புக்குச்சார்பாக அளிக்கப்பட்ட 109 வாக்குகளில் ஒரு வாக்கே, அதனை அளித்தவரின் கையொப்பம் இல்லாததால் செல்லுபடியற்றதாகியதாகக் கூறப்பட்டது.

முதல் வாக்கெடுப்பில் - ஐக்கிய தேசியக்கட்சி, இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (கிங்ஸ்லி இராசநாயகம் தவிர்ந்த) 21 எம்.பிக்களுமாகச் சேர்ந்து 109 எம்.பிக்களில் ஒருவர் அரசுதரப்புக்கு மாறி வாக்களிக்க, எஞ்சியோர் லொக்குபண்டாரவுக்கு ஆதரவு தந்தனர்.

இதனால், இரு தரப்பும் தலா 108 வாக்குகள் பெற்று சரிசமமாக இருந்தன. எனவே, இரண்டாவது வாக்கெடுபபுக்கு வழிசெய்யப்பட்டது.

ஏற்கனவே முதல் வாக்கெடுப்பில் அரச தரப்புக்கு ஆதரவாகத் தாம் அளித்த வாக்கின் சீட்டில் கையொப்பமிடத்தவறியதால், அந்த வாக்கைச் செல்லுபடியற்றதாக வகை செய்த எம்.பி, இரண்டாவது வாக்கெடுப்பில் சரியாக - பிழையின்றி - வாக்களிக்க, அதன் மூலம் அரச தரப்பு வேட்பாளர் 109 இற்கு 108 என்ற கணக்கில் வெல்ல வாய்ப்பு இருந்தது.

ஆனால், இரண்டாவது வாக்கெடுப்பை அரச தரப்பு எம்.பிக்களே குழப்பி அதை இரத்துச்செய்ய வைத்தனர்.

அதனால் ஏற்பட்ட இழுபறியால் மூண்றாவது வாக்கெடுப்புக்கு கால தாமதமாக்கியது.

இந்தக் காலதாமதத்தைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் சிலர், வாக்களிக்காமல் வெளியேறிய ஹெல உறுமய எம்.பிக்களுடன் தொடர்பு கொண்டு பேசினர்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சி இந்தச் சபாநாயகர் தெரிவில் பங்குபற்றாமல் நடுநிலைமை வகிப்பது என முடிவு செய்திருந்தது.

ஆனால், அக்கட்சியின் இரு எம்.பிக்கள் கட்சியின் முடிவுக்கு மாறாக அணி மாறி, வாக்கெடுப்பில் கலந்துகொண்டு அரசுதரப்புக்கு ஆதரவாக முதல் இரு கட்ட வாக்கெடுப்பிலும் வாக்களித்தனர் என்பதை எதிர்க்கட்சிப்பிரமுகர்கள் ஹெல உறுமயவின் ஏனைய எம்.பிக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

அப்படி அணி மாறி வாக்களித்த இரு ஹெல உறுமய எம்.பிக்களின் வாக்குகளைச் சமப்படுத்தி, அக்கட்சியின் நிலைப்பாட்டின்படி இத்தேர்தலில் அக்கட்சி எம்.பிக்கள் நடுநிலைமை வகித்தனர் என்ற நிலைமை உருவாக வேண்டுமானால் வாக்களிப்பில் பங்குகொள்ளாமல் ஒதுங்கியிருக்கும் ஹெல உறுமய எம்.பிக்களில் இருவர் மூன்றாவது வாக்கெடுப்பில் கலந்துகொண்டு எதிரணித் தரப்புக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதனை ஏற்று ஹெல உறுமயவின் மற்றும் இரு உறுப்பினர்கள் சபைக்கு வந்து மூன்றாவது வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர்.

இதனால் முதல் வாக்கெடுப்பில் 108 வாக்குகளைப் பெற்ற எதிர்த்தரப்பு மூன்றாவது வாக்கெடுப்பில் 110 வாக்குகளைப் பெற்றது. அரசுத்தரப்புக்கு உரிய 109 வாக்குகள் கிடைத்தன.

இரண்டாவது வாக்கெடுப்பு பூர்த்தி செய்யப்பட அனுமதிக்கப்பட்டிருந்தால் - ஹெல உறுமயவின் பிந்திய இரு எம்.பிக்களும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாத நிலையில் - அரசுத் தரப்பு 109 இற்கு 108 என்ற வாக்குகள் கணக்கில் வென்றிருக்கும் என நாடாளுமன்றச் செய்தியாளர்கள் சுட்டிக்காட்டினர். (எ-க-7-ரி)

## வயது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயது குறைந்த மூன்று சிறுமிகளையும், ஐந்து சிறுவர்களையும் கண்டுபிடித்த இக்குழுவினர் அவர்களை இடைத்தங்கல் முகாமில் கையளித்துள்ளனர்.

இந்த முகாம் யுனிசெவ் அமைப்பின் மேற்பார்வையில் இயங்கிவருவது தெரிந்ததே. (எ-3)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் முதலாவது கூட்டம் தொடர்பான ஜனாதிபதியின் பிரகடனத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகர வாசித்தார்.

அதைத் தமிழிலும் வெளியிடும்படி தமிழ்க்கூட்டமைப்பின் சார்பில் தெரிவான எம்.பிக்கள் வலியுறுத்தினர்.

ஆனால், நாடாளுமன்ற நடவடிக்கைகளையே மூன்று மொழிகளிலும் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதியின் பிரகடனத்தின் மொழிபெயர்ப்பு இல்லை என்றும் பதிலளித்தார் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம். (எ-க)

Dip. in Hardware
Period- 72 Hours/ 9 Days
Time 09.30 - 16.30 (Full time)
Batch III
28/04/2004 லிருந்து 10/05/2004
மிகக் குறுகியகால, மிகப் பயன்மிக்க, யாழ் நகரில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படும் இப் பாடநெறியில் இணைந்து பயன்பெறுவதற்காக உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்
பதிவுகளிற்கு



STP
73, Palaly Road, Kantharmadam,
T.P:021-222-2674

LOGIC
மாபெரும் கருத்தரங்கு
★ இன்று...
SCIENCE HALL
1.30 p.m
★ நாளை தென்மராட்சியில்
பிறைற்றின் கல்வி நிலையம்
காலை - 9.30 a.m
By:- S.சயந்தன்
P.கமல்
S.R.J. சுதன்

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் ஐயம்பிள்ளை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஐயம்பிள்ளை அவர்கள் நேற்று (22.04.2004) வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.04.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்குனியன் வளவு,
அளவெட்டி. (31187)(36-11-13)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்,மருமக்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது